# கிளிநொச்சி மன்னார் மாவட்டங்கள் விரைவில் பாரிய வரட்சியை எதிர் நோக்கியுள்ளன

எதிர்வரும் கோடைக்காலத்தில் கிளிநொச்சி மன்னார் மாவட்டங்கள் பாரிய வரட்சியை எதிர்நோக்குமென அஞ்சப்படுகின்றது. தற்போது ஏற்பட்டுள்ள சூழல் வெப்பநிலை அதிகரிப்பினால் கிளிநொச்சி, மன்னார் பகுதிகளில் உள்ள குளங்களும், கிணறுகளும் வற்றி வருகின்றன. வழமையாக கடும் வரட்சி ஏற்படும் ஜூலை, ஓகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் இம்முறை கடும் பாதிப்பு ஏற்படுமென அஞ்சப்படுகின்றது. கிளிநொச்சியிலும், மன்னாரிலும் உள்ள ஒருசில பகுதிகளில் இப்போதே கிணறுகள் வற்றி விட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் இம்முறை சிறுபோக நெற்பயிர்ச் செய்கை இவ் வரட்சியினால் பாதிப்படையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (05)

பக்கங்கள் பத்து விலை ரூபா: 3-00

# முரசொலி

ஆசு 04 ஒலி 66 புதன் 11-04-1990 (பங்குனி 29) ரமழான் 14

★ யாழ்ப்பாணம் கிளிநொச்சி பிரதேசங்களிலிருந்து ஆட்சேர்ப்பு

# றிசேர்வ் பொலிஸ் நேர்முகப்பரீட்சை

# 20-ம்திகதி யாழ் பொலிஸ் நிலையத்தில்

## இதுவரை விண்ணப்பிக்காதோரும் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றலாம்

யாழ்ப்பாணம், கிளிநொச்சி பிரதேசங்களிலிருந்து றிசேர்வ் பொலிஸ் சேவைக்கு ஆட் சேர்ப்பதற்கான நேர்முகப்பரீட்சைகள் இம் மாதம் 20-ம் திகதியிலிருந்து யாழ், பொலிஸ் நிலையத்தில் நடைபெறவுள்ளது,

றிசேர்வ் உப பொலிஸ் பரிசோதகர் (R S I) றிசேர்வ் பொலிஸ் கான்ஸ்டபிள் (R,P.C) றிசேர்வ் பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் (R W.P.C) ஆகிய பதவிகளுக்கே முதலில் நேர் முகப் பரீட்சை இங்கு நடைபெறவுள்ளது.

இந்த பதவிகளுக்கு ஏற்கனவே விண்ணப்பிக்காதவர்களும் நேர்முகப் பரீட்சைக்கு நேரடியாகத் தோற்ற முடியும் என யாழ் பொலிஸ் பகுதி அறிவித்துள்ளது.

நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுபவர்கள் சான்றிதழ்

— 10-ம் பக்கம் பார்க்க

## 4500 பேர் இலங்கையில் வருடாந்தம நஞ்சினால் பலி

இலங்கையில் ஆண்டிற்கு நாலாயிரத்தி ஐந்நூறு பேர் நஞ்சினால் இறக்கின்றனர் என கணிப்பிடப்பட்டுள்ளது நஞ்சினால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுபவர்களில் ஐம்பதுவீதத்தினர் அங்கேயேஇறக்கின்றனர். நஞ்சு மருந்துகளை துஷ்பிரயோகம் காரணமாகவும் வருடாந்தம் 800 பேர் பலியாகின்றனர் மதுபான அற்கஹோலினால் ஆண்டிற்கு 1200 பேர் பலியாகின்றனர் இவற்றுடன் 92 சத வீதத்தினர் தற்செயலாக நஞ்சை உண்பதால் இறக்கின்றனர்.

## குடாநாட்டில் மின்சாரம் விரைவில் நிற்கும் அபாயம்

யாழ் குடாநாட்டில் மின்சாரம் நிற்கும் அபாயம் ஏற்படவுள்ளது

யாழ் உள்ளூராட்சிச் சபைகள் 129 கோடி ரூபாவரை மின்சாரசபைக்கு நிலுவைப் பணம் கட்ட வேண்டியுள்ளது.

பிரதேச சபைகள், மாநகர சபைகள்பட்டண சபை, நகரசபை, என்பன இந்த மின் நிலுவைகளை உடன் செலுத்தாவிடில் யாழ் குடா நாட்டில் மின்சார தட்டுப்பாடு ஏற்படும் என மின் அத்தியட்சகர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

## உ, அ. அதிபர் பணிமனைகள் யாழ் மாவட்டத்தில் புனரமைப்பு

யாழ், மாவட்டத்தில் உள்ள சகல உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளின் புனரமைப்பு வேலைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. ஒரு சில உதவி அரசாங்க அதிபர் பணிமனைகள் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பணிமனை நேற்று முன்தினம் யாழ் அரசாங்க அதிபர் திரு. அன்ரன்

— 10-ம் பக்கம் பார்க்க

யாழ் கோம்பயன் மயானத்தில்

## மின்சாரம் மூலம் பிரேத தகனம் முடிவு எடுக்கப்படவில்லை

யாழ் கோம்பயன் மயானத்தை அபிவிருத்தி செய்து மயானத்திற்கு மின்சார விளக்குகளை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமென யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு வி. பி. பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

இதேநேரம் மேற்படி மயானத்தில் விரைவில் மின்சார மூலம் பிரேதங்களை எரிக்கும்

— 10-ம் பக்கம் பார்க்க

உள்ளே

மண்ணைப்பொன் ஆக்கும் மர்மநேர மனிதர்கள் ராத்திரி ரவுண்ட் அப்

3 ஆம் பக்கம்

யாழ் செயலகத்தில்

## பிறப்பு சான்றிதழ் விண்ணப்பம் நேற்று முதல் மீள ஏற்பு

நேற்று முதல் யாழ். மாவட்ட செயலகத்தில் பிறப்பு இறப்பு சான்றிதழ்களுக்காக விண்ணப்பங்கள் ஏற்கும் வேலைகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இச் சான்றிதழ்கள் தேவையானவர்கள் கடைசித் திகதி வரை காத்திருக்காமல் முன் கூட்டியே விண்ணப்பத்தை அனுப்பி சான்றிதழ்களை பெற்றுக் கொள்ளும்படியும சகலரும் இவ் விடயத்தில் புரிந்துணர்வுடன் நடக்கும் படியும் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் கேட்டுள்ளார் 3

பயிலுநர் ஆசிரியர் தெரிவில்

## போலி ஆவணம இருந்தால் எந்நேரத்திலும் நியமனம் ரத்து

பயிலுநர் ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டபோதும், போலி ஆவணங்கள் கண்டு பிடிக்கப் பட்டால் எந்நேரத்திலும் நியமனம் ரத்துச் செய்யப்படும் என யாழ் கல்விப் பணிப்பாளர் திரு இரா. சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார்

போலி ஆவணங்கள் சமர்ப்பித்தோர் பற்றிய விபரங்கள்

—10 ஆம் பக்கம் பார்க்க

# மாத்தயா - ஜனாதிபதி நேற்று சந்தித்து பேச்சு

கொழும்பு சென்றுள்ள விடுதலைப் புலிகளின் பிரதி நிதிக் குழுவினர் நேற்று இரவு ஜனாதிபதி பிரேமதாஸவை சந்தித்து பேச்சுகளை நடாத்தினர் வடகிழக்கு கட்ட நிலைமைகள் மற்றும் அமைச்சர் ஜனாப் ஏ' சி எஸ் ஹமீத்துடன் நடாத்திய பேச்சு விபரங்கள் போன்றவை இச்சந்திப்பில் ஆராயப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை நேற்றுக் காலையும் நீதியமைச்சர் ஜனாப் ஏ சி எஸ் ஹமீத்துடன் விடுதலைப் புலிகளின் பிரதி நிதிக் குழுவினர்இ நமணி நேரமபேச்சுகளை நடாத்தினர். நேற்றுக்காலை நடைபெற்ற பேச்சுகளில்சட்ட ஒழுங்கு நிலைமை பற்றியும் ஆராயப்பட்டுள்ளது. அரசு தரப்பில் முப்படைத் தளபதிகளும் ஆளுநாநளின்செனவிரட்னவும் கலந்து கொண்டனர்,

இப் பேச்சுகளில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் மாத்தயா, பிரதித் தலைவர் கரிகாலன் செயலாளர் நாயகம் யோகி. அரசியல்

—10ம் பக்கம் பார்க்க

## ஈ.பி.ஆர்.எல்.எவ். வெளியேற்றம் குறித்து அபுயூசுப் விளக்கம்

வடகிழக்கு மாகாணத்தில் இருந்து ஈ பி. ஆர், எல். எப் ஏன் வெளியேறியது என்பதற்கு வடகிழக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் அபுயூசுப்விளக்கமளித்துள்ளார்

ஈ பி. ஆர். எல். எப வெளியேறியிருக்காவிட்டால் விடுதலைப்புலிகள் ஆயுதங்களை தொடர்ந்தும் வைத்திருப்பார்கள்; எனவே நல்ல நோக்க

—10ம் பக்கம் பார்க்க

# கொம்பியூட்டர் கல்வி

**Diploma in Computer Programming**
**& Data Processing Course**
**BASIC _ Language**

**4 மாதங்கள்**
(திங்கள், புதன், வகுப்புக்கள்)

**ஆரம்பம்: 23 - 04 - 90** 10.30 மணி

| FEES மாதம் 300/— மட்டுமே |

மேலும் விபரங்களுக்கு:

**SCHOOL OF BUSINESS ADMINISTRATION**
(Leaders in Computer Ebucation)
16, 3RD CROSS STREET
(OLR தேவாலய மேற்குப் பக்கம்)
யாழ்ப்பாணம்.

04102



## ஓராண்டு நினைவலைகள்



வேலணை மேற்கு
அமரர்
**உயர்திரு. நாகேசு சுந்தரம்பிள்ளை**
**(சண்முகலிங்கம்) அவர்கள்**

அன்னை மடியில் 1936.08.25.
ஆண்டவன் அடியில் 1989.03.23.

திதி:- 1990-04-:11

மதிக்க முடியா மாணிக்கமே!
மங்காத மணி விளக்கே!
மறைந்தாண் டொன்றாகி விட்டதையா
நீங்கவையே உம் நீங்காத நினைவலைகள்
பாசமிகு உடன் பிறப்பே நீர்
பறந்தாண் டொன்றாகியும்
நீங்கவையே எமை விட்டு உம் பாசத்துடிப்பு
ஆறாத் துயரில் எமையாழ்த்திவிட்டு மீளாத் துயில்
கொண்டஎம் அன்புருவே உங்கள்
ஆத்மா சிற்பனையில் அற்புத நடனமாடும்
ஆறுமாமுகனின் திருவடிக்கீழ் பேரானந்தப்
பெருநிலையடைய வேண்டியிறைஞ்சும்

மனைவி, மக்கள்,
உடன்பிறந்தார்,
உற்றார், உறவினர்.

"தாயகம்"
புலவர் வீதி,
வேலணை மேற்கு,
வேலணை - 06.

04100


# கவிதையாக போராட்ட வரலாறும் வரவேண்டும்

**—கரிகாலன்**

"மக்கள் இலகுவாகப் புரிந்து கொள்ளக் கூடியதும் உணர்வினை ஊட்டக் கூடியதுமான இலக்கிய வடிவங்களாக கவே கவிதைகள் அமைகின்றன. நமது இளைய தலைமுறையினர் அறியக்கூடியதாக போராட்ட வரலாற்றை எழுதுங்கள். அவற்றை எமது செலவில் அச்சுவாகனமேற்ற நடவடிக்கை மேற் கெகள்வோம்"

இவ்வாறு அம்பாறை மாவட்டத்தில் உள்ள கவிஞர்கள் மத்தியில் பேசுகையில் விடுதலைப்புலிகள் மக்கள்முன்னணி பிரதித் தலைவர் திரு எஸ். கரிகாலன் கூறினார்.

"தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாறு, போராட்டத்தின் தன்மை, நெமில்கண்டவை அனுபவித்த துன்பங்கள் போன்றவற்றை கவிஞர்கள் கவிதைகளாக வடிக்க முன்வர வேண்டும்" என்றும் அவர் கோரிக்கை விடுத்தார்.

## நிவாரணம் கிடைத்தது

வன்செயல்கள் இராணுவ நடவடிக்கைகளின் போது காணமற் போன ஆசிரியர் சற்குண சேயனின் பனைவிக்கு அவரது பாக்கிச் சம்பளத்தின் ஒரு பகுதியாகிய 40ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

சற்குண சேயனின் மாதாந்தச்சம்பளத்தை தொடர்ந்து அவரது பனைவி பெறுவார்.

சம்பளப்பாக்கியின் முதற் தொகுதி 40 ஆயிரம் ரூபாவையும் மாதாந்த சம்பளத்தையும் திருமதி சற்குணசேயன் பெற நடவடிக்கை எடுத்துக்கொடுப்பனவைத்துரிதப்படுத்திய இலங்கைத தமிழர் ஆசிரியர் சங்கப் பொது செயலாளருக்கு கடிதமூலம் பாராட்டையும் நன்றியையும் திருமதி சறகுணசேயன் தெரிவித்துள்ளார்.

## இளவாலை றே. க. த. பாடசாலை
# திறமை போற்றப்பட வேண்டியது எனப் பாராட்டு

இளவாலை றே. க.த ஆண்கள் பாடசாலை ஒரு ஆரம்ப பாடசாலை இங்கு இடவசதி போதாது. ஆசிரியர் பற்றாக்குறை, தளபாடங்கள் தட்டுப்பாடு சொந்தமாக விளையாட்டு மைதானம் இல்லை இவ்வளவு வசதியீனங்களுக்கு மத்தியிலும் ஆசிரியர்களும் மாணவர்களும் மெய்வல்லுநர் போட்டியில் சிறந்த தரத்தை காட்டியுள்ளனர். இப்படியான ஒரு பாடசாலைக்கு கட்டாயம் உதவ வேண்டும் என எண்ணங் கொண்டுள்ளேன். எமது நிறுவனமூலம் உதவி செய்வேன்.

இவ்வாறு அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் உபதலைவர் திரு, ஏ, நல்லதம்பி மேற்படி பாடசாலையின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டிக்கு பிரதம விருந்தினராகக் கலந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

வித்தியாலய அதிபர் திரு ஆ. சவரிப்பிள்ளை தலைமையில் விளையாட்டுப் போட்டி நடைபெற்றது.

திரு. நல்லதம்பிதொடர்ந்து உரையாற்றுகையில்: ஒருவகுப்பிற்கு வேண்டிய தளபாடங்களும் அதிபர் நியமிக்கும் தொண்டர் ஆசிரியர் ஒருவருக்குரிய வேதனத்தையும் வழங்க வேண்டும் எனவும் தீர்மானித்துள்ளேன், எனது நிறுவனத்துடன் கலந்தாலோசித்து இதை ஏற்பாடு செய்வேன்! என்றார்.

அருட் திரு பற்றிக் அடிகளார் ஒளியேற்ற, அருட்திரு யேசுதாசன் அடிகளார் பாடசாலைக் கொடியை ஏற்றி விளையாட்டுப் போட்டியை ஆரம்பித்து வைத்தார்,

இளவாலை கொத்தணி அதிபர் அருட திரு.பஸ்ரின் ஞானப் பிரகாசம் அடிகளார் தமது உரையில் மிகுந்த சிரமம், நிறை வின்மைகள் மத்தியில் போட்டி அனைவரும் பாராட்டும் வகையில் உயர்ந்து விளங்குவதற்கு அதிபரையும் ஆசிரியர்களையும் பாராட்டாமல் இருக்கமுடியாது என்றார்.

போல் இல்லம் 137 புள்ளி பெற்று முதற் பரிசையும் பீற்றர் இலலம் 99 புள்ளி பெற்று 2வது இடத்தையும் 83புள்ளி பெற்ற ஜோன் இல்லம் 3வது இடத்தையும் பெற்றது.


## முக்கிய அறிவிப்பு

SURESH
POST BOX No: 23410
MUHARRAQ
BAHRAIN
Tel. P, No. 342492

மேற்படி முகவரியில் (பஃறெயினில்)தொழில் பார்க்கும் சுரேஸ் என்பவரின் உறவினர்கள் உடனடியாக என்னைச் சந்திக்கவும்

எனது முகவரி

அப்புத்துரை-ஸ்ரீகுமார்
தோலகட்டி (ரெயிலர் கடை)
வயாவிளான்

041 07


## மின்சாரம் தாக்கி சிறுவன் பலி

அளவெட்டி கும்பழாவயில் சிறுவன் ஒருவன் மின்சாரத்தினலதாக்குண்டுமரணமானான். ஐயாத்துரை-சிரோன்ராஜ(3) என்றசிறுவனே மின் தாக்குதலுக்கு உள்ளானவராவார். வீட்டு மின் இணைப்பிலிருந்த வயர் ஒன்று கழன்று விழந்து கிடந்தபோதே இவ் விபத்து நடந்தது.


# அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

வட்டக்கச்சி இராணமடு அருள்மிகு ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் ஆலய பரிபாலன சபையினரால் அபிவிருத்தி நிதிக்காக 4. 4. 90 புதன்கிழமை அதிர்ஷ்டம் பார்க்கப் பட்ட அதிர்ஷ்டலாபச்சீட்டுக்களில் பரிசுபெற்ற இலக்கங்கள் பின்வருமாறு:

**முதலாம் பரிசு சீ.இல. 913A**
**இரண்டாம்பரிசு சீ.இல. 249A**
**மூன்றும்பரிசு சீ.இல. 850B**

10 ஆறுதல் பரிசு இலக்கங்கள் வருமாறு:

711A, 1136B, 556B, 1241B, 708A
631A, 1125B, 776A, 203A, 676A,

பரிசுபெற்றவர்கள் பரிசுப் பொருட்களை இம் மாதம் 30-ம் திகதிக்கு முன் பெற்றுக்கொள்ளவும். தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி;

செயலாளர்
இரணைமடு ஸ்ரீமாணிக்கப்பிள்ளையார்ஆலயம்
வட்டக்கச்சி

நன்றி

இப்படிக்கு
மா.சிவநேசன்
செயலாளர்

08 04.90

04104



## சிறு விளம்பரம்

### தேவை

ரீ மேக்கரும் 2 சப்பிளையர்கள் பெண்கள் உடனடியாகத் தேவை. தேவை எனில் தங்குமிடம் கொடுக்கப்படும். முகவரி அருள் கூல்பார் பரந்தன்
04099

### விற்பனைக்கு

நல்ல பாவனையில் உள்ள 6 சிறி 8000 தொடர் இலக்கம் கொண்ட வக்சோல் வீவா (Vauxacll Viva) இரண்டாவது உரிமையாளர்) நியாயமான விலைக்கு உடன் விற்பனைக்கு உண்டு தொடர்பு: 83,பிரதான வீதி, 5 - ம் குறுக்குத் தெரு சந்தி, யாழ்ப்பாணம். 04101

### கல்வி

லண்டன் (Pitman) Typing. Shorthand யூலை 90 பரீட்சைக்குத் தோற்ற விரும்புவோர் 14.04.90 இற்கு முன் எம்மிடம் தொடர்பு கொள்ளவும். BOND INSTITUTES 58A, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம். 04093

# மற்றைய கச்சேரிகளில் நடவடிக்கை தேவை

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒன்றிணைந்த புனர்வாழ்வுத் திட்டத்தில வழங்கப்பட்ட நிவாரணக் கொடுப்பனவுகளில் பல மோசடிகள் இடம் பெற்றுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அறுபதாயிரம் குடும்பங்கள் மட்டுமே நிவாரணம் பெறத் தகுதியுடையன.

ஆனால், நிவாரணம் தொடர்பாக தொண்ணூற்றி எட்டாயிரம் படிவங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குத் தலா ஒரு நிவாரணப் படிவம் வழங்கப்படவேண்டும்.

ஆனால், சில குடும்பங்கள் ஒரே சமயத்தில் பல படிவங்களைப் பெற்றுள்ளதாகத் தெரிகிறது

இதனால் உண்மையில் பாதிக்கப்பட்ட பல குடும்பங்கள் நிர்க்கதியாகியுள்ளன.

இதேசமயம் மட்டு நகரில் புனர்வாழ்வுக் கொடுப்பனவுக் காசோலை மோசடியில் அரச உயரதிகாரிகளும் சம்பந்தப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

நிவாரணக்கொடுப்பனவுக் காசோலை பெறக் கிராமசேவகர் சிபார்சு செய்த விண்ணப்பதாரியை உதவி அரச அதிபர் சிபார்சு செய்யவேண்டும். இதன்பின் வவுச்சர் தயாரிக்கப்பட்டுப் பரிசீலிக்கப்பட்டு உறுதி

## இதயநாதம்

புதன்கிழமை 11-04-1990

நல்வாக்கு

ஒரு பொய்யையே திருப்பித் திருப்பிச் சொல்வதால் அது மெய்யாகி விடலாம்.

-ஆங்கிலப் பழமொழி.

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

செய்யவேண்டும்.

இதன்பின்னரே காசோலை எழுதப்பட்டு அதிகாரி கையொப்பம் இடவேண்டும்.

ஆனால், செயலக அதிகாரி ஒருவர் தானே வவுச்சரைத் தயாரித்துக் காசோலையைப் பெற்று வர்த்தகர் ஒருவரிடம் மாற்றித் தாமே பணத்தைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

இதேசமயம் வேறு ஓர் அதிகாரி சில வெற்றுக் காசோலைகளைக் கிழித்து எடுத்து வர்த்தகரிடம் பணமாக மாற்றிக் கொண்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

மட்டக்களப்பில் இவ்வித மோசடிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இவ்வித மோசடிகள் பல இன்று இலங்கையில் பல கச்சேரிகளில் இடம் பெறுகின்றன

சந்தர்ப்பவசத்தால் அதிகாரிகள் பலர் இவற்றில் பிடிபடாது உள்ளனர்.

வடக்கின் மற்றைய மாவட்டக் கச்சேரிகளிலும் இது தொடர்பான முழு விசாரணைகள் நடத்தப்படவேண்டும்.

இன்று வழங்கப்படும் 1000 ரூபா, 4000 ரூபா, 50 ஆயிரம் ரூபா, உடைந்த வீட்டு நிவாரணம் என்பவற்றில் மோசடிகள் இடம் பெற்றுள்ளன.

ஆயிரம் ரூபா லஞ்சமாக வாங்கி 4000 ரூபா நிவாரணம் கொடுப்பதாகக் கிராம சேவகர்கள் மேல் புகார்கள் தெரிவிக்கப்படுகின்றன.

இல்லாத ஒருவர் இறந்ததாகக் கூறிப் பலர் நிவாரணம் பெற்றதாகவும் புகார்கள் தெரிவிக்கப்படுகின்றன.

சுகயீனம் காரணமாக இறந்தவர், வன்செயல் காரணமாக இறந்ததாகவும் கூறப்படுகின்றது.

இவற்றை வெளிக்கொணர ஒரே வழியுண்டு.

நிவாரணம் பெற்றவர்களின் பட்டியலை அந்தந்தக் கிராமங்களில் பார்வைக்கு வைக்கவேண்டும்.

இதனால் பல குடும்பங்களும், பல கிராம சேவகர்களும் அம்பலத்திற்கு வருவார்கள் என்று பலர் முரசொலிக்குக் கடிதங்கள் எழுதுகின்றனர்.

எனவே நிவாரண ஊழலைக் கண்டுபிடிக்க அரச அதிபர்கள் நிவாரணப் பட்டியலை அந்தந்தக் கிராமங்களில் கிராம சேவகர் மூலம், அரச அதிபர் ஒப்பத்துடன் பார்வைக்கு வைக்க நடவடிக்கைகள் எடுப்பது நல்லது

---

### நகைக்கடை வீதியில் மண் அள்ளுபவர்களிடம் நேரடி விசிட்

# மண்ணைப் பொன்னாக்கும் மர்ம நேரத்து மனிதர்கள்

> "எங்கட பிழைப்பில மண் அள்ளிப் போட்டிடாதையுங்கோ... நாங்கள் கனபேர் இந்தத்தொழிலை நம்பி வாழுறம்"
>
> மண்ணை அள்ளிப் பொன்னாக்குபவர்

இரவு பன்னிரெண்டு மணி இருக்கும் சன நடமாட்டம் அற்ற நேரம் கன்னாதிட்டி வீதியால் மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்தோம். இரண்டு மூன்று பேர் உரபாக்கில் எதையோ சுமக்க முடியாமல் சுமந்து கொண்டிருந்தனர்.

அவர்கள் பின்னால் சிலர் தமக்குள் உரையாடியவாறு நடந்து வந்து கொண்டிருந்தனர். எமக்கோ எதுவுமே புரியவில்லை இந்த நேரத்தில் இவர்கள் என்ன செய்துவிட்டுப் போகிறார்கள். அந்த

## ராத்திரி ரவுண்ட் அப்

மூன்று பேரும் சுமந்து செல்லும் உரபாக்கிற்குள் என்ன இருக்கிறது? இந்த வினாக்கள் எங்களுடைய மனதில் மீண்டும் மீண்டும் எழலாயிற்று.

மறுநாட்காலை காங்கேசன் துறைவீதி, கன்னாதிட்டிவீதி, கஸ்தூரியார் வீதி ஆகிய வீதிகளில் வசிப்போருடன் உரையாடியபோது சில ஆச்சரியமான தகவல்கள் கிடைத்தன.

இரவு பன்னிரெண்டு மணிக்கு இவ்வீதியில் சாறம் அணிந்து கொண்டு நடக்கலானோம். கடைவீதிகள் எல்லாம் வெறிச்சோடிச் சோகத்தோடு காணப்பட்டன.

மக்கள் நடமாட்டம் தான் இல்லையே தவிர கட்டாக்காலி நாய்களுக்கு அவ்வீதியில் குறைவில்லை. நாய்கள் சுதந்திரமாக உலாவிக் கொண்டிருந்தன.

கஸ்தூரியார் வீதியில் ஒரு நகைக்கடை வாசலில் ஐந்து பேர் உரபாக் ஒன்றிற்குள் கடை வாசலில் இருக்கின்ற மண்ணை அள்ளிக் கொண்டிருந்தனர்.

நாம் முதலிலே வீதிக்குத் தார் ஊற்றுவதற்கு மண் அள்ளுகிறார்கள் என்று நினைத்தோம. அவர்களுடன் உரையாடிய போதுதான் உண்மை நிலையை அறியமுடிந்தது

மேலே குறிப்பிட்ட வீதிகளில் நகைவியாபாரம் நடைபெறுகிறது. நகை செய்யும் பத்தர்களும் இவ்வீதிகளில் உள்ள கடைகளிலேயே நகை வேலை செய்கிறார்கள்.

நகைவேலை முடிந்து வரும் பத்தர்களின் உடலில் ஒட்டப்பட்டிருக்கின்ற பவுண் தூள்கள் கடை வாசலிலும், இவ்வீதியிலும் விழுவதற்குச் சாத்தியக் கூறுகள் நிறைய உண்டு

இப்படியான துகள்கள் உள்ள வீதிமண்ணையே மேற்குறிப்பிட்ட கூட்டத்தினர் அள்ளிக்கொண்டிருந்தனர். இவர்களிடம் நாம் பேச்சுக் கொடுத்தபோது, முதலில் எதுவுமே எம்முடன் கதைக்கவில்லை... சிலர் கோபத்தோடு எம்மை நோக்கினர்

இக்கூட்டத்தில் உள்ள ஒருவர்... இந்த இராத்திரி வேளையில் வந்து தொந்தரவு குடுக்கிறியே... உனக்கு வேற வேலை இல்லையா... என்று பொரிந்து தள்ளினார்.

அவருடைய கோபம் எம்மை என்ன செய்துவிடப் போகிறது என்று மனதைத் தேற்றிக் கொண்டு நாம் கடை ஒன்றின் படிக்கட்டில் இருந்து என்ன செய்கிறார்கள் என அவதானிக்கலானோம்.

நீண்ட 'பிறஸ்' ஒன்றினால் கடைவீதிமண்ணைக் கூட்டி உரபாக்கில் நிரப்பிக் கொண்டு சென்று கொண்டிருந்தனர். இந்தக் கூட்டத்திற்கு ஒரு முதலாளி இருக்கிறார் அவர் வந்து நின்று பார்த்துக் கொண்டிருந்தார்.

சிறிது நேரத்தின் பின்... சில நகைக்கடை வாசலுக்குச் சென்று மண் கொஞ்சம் கிள்ளி எடுத்து மின்கம்ப வெளிச்சத்தில் பார்த்தார்... ஒருவருடைய பெயரைச் சொல்லிக் கூப்பிட்டு இந்த மண்ணையும் கூட்டி அள்ளுமாறு உத்தரவு பிறப்பித்துவிட்டுச் சைக்கிளில் ஏறிச் சென்றுவிட்டார்.

கூட்டமா இருந்தவர்கள் பிரிந்து வெவ்வேறு இடங்களில் இருந்து மண்ணை அள்ளிக் கொண்டிருந்தனர்... கொஞ்சம் சாந்தமான தோற்றம் உள்ள ஒருவன் மண்ணை சுமந்துகொண்டு சென்று கொண்டிருந்தான்.

நாம் அவனை பின் தொடர்ந்து தகவல்களைப் பெறலானோம்... இந்தமண்ணை அள்ளிக்கொண்டு போய் முதலாளி ஒருவருடைய வீட்டில் கொடுப்பதோடு எம் வேலை முடிந்து விடுகின்றது.

இந்த மண் அள்ளுவதற்கு 50 ரூபா தருவார்கள நான் சம்பளத்திற்கு வேலை செய்கின்றேன் இரவில் எனக்கு மண் அள்ளுவதுதான் வேலை.

வேறு சிலர் கூட்டாக மண் அள்ளிச் செல்வார்கள் இது இரவு நேர சுய தொழில் என்றார்.

இந்த மண்ணை என்ன செய்வார்கள் என்று துருவிக் கேட்டபோது இந்த மண்ணை அள்ளிச் சென்று அரிதட்டு ஒன்றில் போட்டுதண்ணீரில் கழுவுவார்கள், அழுக்குகள், மணல்கள் போகும்வரை நன்றாகக் கழுவி வடித்தெடுப்பார்கள், இப்படிவடித்தெடுத்த மண்ணை ஒரு பாத்திரத்திற்குள் இட்டு கொதிக்க வைப்பார்கள் இப்பாத்திரத்திற்குள் அசிட் ஊற்றியே கொதிக்க வைப்பார்கள். அசிட் தேவையற்ற பொருட்களை வெள்ளி ஈயம் போன்றவற்றை கரைத்துவிடும் இறுதியாக பவுண் துகள்கள் மட்டுமே மிஞ்சும். அதனை ஒன்று திரட்டி, கட்டியாக்கி அதனை கடையில் கொண்டு சென்று விற்பார்கள்.

நூறுரூபா பெறுமதியான அளவு பவுண் கிடைக்கும். சிலவேளை அதுவும் கிடையாது அதிர்ஷ்டவசமாக இரண்டாயிரம் ரூபா பெறுமதியான அளவுக்கும் பவுண்கிடைக்கும்.

இது ஒரு சூதாட்டம் போன்றது என்று பதில் தந்தான். ஒரு நம்பிக்கையின் நிமித்தம் இந்த தொழில் நடைபெறுகி

**உதரன்**

றது. என்று கூறிவிட்டு சுமையை சுமக்க முடியாமல் சுமந்து கொண்டு செல்லலானான் அந்த வாலிபன்

நாம் இரண்டு வாரங்கள் இரவு வேளைகளில் மேற்குறிப்பிட்ட வீதிகளில் என்ன நடக்கிறது என்று அவதானிக்கலானோம்.

இரவு 12மணிக்கு ஒருமுதலாளியின் கூட்டம் வந்து மண் அள்ளிச் செல்லும். இரவு 2 மணியளவில் வேறு ஒரு கூட்டம் வந்து மண் அள்ளிச் செல்லும்.

இரண்டு கூட்டங்களும் ஒன்றாகச் சந்திக்கின்ற போது சண்டைகள் கூட ஏற்படுவது சகஜம். இதனைத் தவிர்க்க ஒரு கூட்டம் மண் சேகரிப்பில் ஈடுபடும்போது மறுகூட்டம் மண் சேகரிப்பில் ஈடுபடுவதைத் தவிர்த்து வருவதாகவும் மண் அள்ளும் கூட்டத்தைச்சேர்ந்த ஒருவர் எம்மிடம் தெரிவித்தார்.

நகைக் கடைக்காரர் சிலரிடம் உரையாடிய போது இப்படி மண் அகற்றுவதால் வீதிகளைப் பாருங்கள் குன்றும் குழியுமாக மாறி வருகின்றன, கன்னாதிட்டி வீதியில் ஏற்பட்ட குன்று குழிகளுக்கு காரணம் இந்த மண் அள்ளுதலே.

இப்போது கஸ்தூரியார் வீதி பல சிரமங்களுக்கு மத்தியில் திருத்தப்பட்டுள்ளது. இந்த வீதியும் மண் அள்ளும் வேலையில் ஈடுபடுவோரால் நாசமாகி விடும் என்ற கருத்தை வெளியிட்டார்.

இக்கட்டுரை எழுதுவதற்கு முதல் நாள் இரவு 10 மணிக்கு கஸ்தூரியார் வீதியில் நின்று கொண்டிருந்தோம் மண் அள்ளும் வேலையில் ஈடுபடுவோர் நகைக்கடை வாசலில் உள்ள அழுக்குக்கான்களில் உள்ள அழுக்கு மண்ணையும் உரபாக்கில் இட்டு சுமந்து செல்வதனைக் காணமுடிந்தது.

இந்த அழுக்கையே பணமாக மாற்ற அவர்கள் படும் சிரமத்தைப் பார்க்கும் போது அவர்கள் மீது எமக்கு ஒரு வித இரக்கமே ஏற்பட்டது.

தொழில்கள் பலவிதம். இந்தத் தொழிலோ புதுவிதம். இது இன்று நேற்று நடைபெறுவதல்ல. பலகாலமாக நடைபெற்று வருகிறது. நாம் நேரடியாகக்கண்டது இதுவே முதற்தடவை.

பத்தர்கள் வேலை செய்யும் இடத்து மண்ணை விலை கொடுத்து வாங்கிச்சுத்திகரித்து பவுண் தூசுகளைக் கட்டியாக்கி விற்பனை செய்வதனை கேள்விப்பட்டிருக்கிறோம். வீதி மண்ணை அள்ளுவதை நாம் காணவில்லை அதற்கு இருக்கும் மதிப்பை நாம் நள்ளிரவு வேளையில் சென்றதால் சுலபமாகக் காணமுடிந்தது.

நகைக் கடைக்காரர்கள் பலர் வீதி மண் அள்ளுவதை எதிர்க்கின்றனர். வீது மண் அள்ளுவோரைக் கேட்டால்... எங்கள் பிழைப்பில் மண்ணை அள்ளிப் போட்டு விடாதீர்கள் என்கிறார்கள்......!?

> "வீதி மண்ணை நள்ளிரவில அள்ளிக்கொண்டு போறதால வீதி குண்டுமகுழியுமாக மாறுது. இதை தடுத்து நிறுத்த வேணும"
>
> நகைக்கடை உரிமையாளர்

# பூபதியம்மா எம் புனித தெய்வம்



அன்னை பூபதியே! எம்அரு மைத் தமிழ்த்தாயே
என்னே உமது இதயத்தின் வீரம் அம்மா
முன்னே எமது தமிழ்ப்பெண்கள் வீரமெல்லாம்
பொன்னே!''கதையல்ல'' ''உண்மை'' என்று காட்டிவிட்டீர்

சுதந்திரம் என்பது ''தோன்றல்''கள் மாட்டன்று
இதந்தரும் ஏந்திழையர்க்குமே சொந்தமென்று
விதந்துமே யாவரும் மெச்சிட உயிர்தனை
இதந்தரும் அகிம்சை வழியிலே ஈந்திட்டீர்

''காளைகள்''மாத்திரம் களத்தினில் மாண்டிட
ஏழையர் போலவே தாய்க்குலம் வீட்டிலே
தோழியருடன் வீண் கதைகள் பேசியே
வாழுதல் தீதெனப் பூபதியம்மா வாழ்ந்து காட்டினீர்

காந்தியின் கொள்கையைக் கடைப்பிடித்துமே
சாந்தி பிறக்கட்டும் தமிழருக் கென்று நீர்
ஈந்தீர் உமது உடல் பொருள் ''ஆவியை''
சாந்தி பெறுவீர் சுவர்க்க பூபதியாக

மெழுகுவர்த்திபோலே உருகி
மேன்மை பெற்றீர் தமிழ்க் காவியந்தன்னில்
வழுதில்லாத நோன்பு நோற்று
பட்டினியிருந்தே ஈழம் காத்தீர்

தாயவள் சேய்களைக் கைவிடமாட்டாள்
தக்க தருணத்தில் கைகொடுப்பாளெனத்
தூயவளே நீரும் தமிழ்த்தியாகியாம் திலீபக்
காளையை தனியே விடாதுதளிர்க்(தாய்க்)கரம் கொடுத்தீர்

சமத்துவம் தமிழருக்கில்லை யென்று
தவமிருந்தாவே பூபதியம்மா
அமரத்துவம் பெற்ற அன்னையின் அருளால்
ஆண்ட பரம்பரை மீண்டுமெழும்பட்டும்

ஈழமண்ணின் சரித்திரத்திலே
என்றும் நிலைக்கும் பூபதி நாமம்
வாழும் நாளில் உமது நாமம்
வாழ்த்தி வாழ்த்தி மகிழ்வார் தமிழர்

''செல்விகள்''கள் மாத்திரம் சிலிர்த்து எழவில்லைத்
''திருமதி''கட்கும் உணர்ச்சி உண்டென
நல்ல விதமாய் நோன்பு செய்தே புகழுடல்
நாட்டினர் திருமதி கணபதிப்பிள்ளை

மட்டுநகரும் யாழ்நகருடனே
தொட்டுக் கரங் குலுக்கியே நிற்கும் என்று
எட்டுத் திசையும் எண்ணி மகிழ்ந்திட
விட்டு உயிரை விண்ணகமேவினீர் தாயே

## விருத்தம்

வேரற்ற மரம்போல் நீரும்
வீழும்வரை தவம் புரிந்தீர்
ஆரோடு நாம் நோவோம்
அகிம்சைக்கு ஒரு தாயே
சீராக ஈழத் தாயகம்
சிறந்த உயிர் பெற்றுப்
பேரோடும் புகழோடும் ஓர்நாள்
பெருமை கொள்வோம் உன்தவத்தால்.

04106

- மாதகல் வாழ் மக்கள்

### அமெரிக்க ஜனாதிபதியாக

# கறுப்பர் வரும் சாத்தியம் மிக நெருங்கி வருகின்றது

## ஜோர்ஜ் புஷ் ஆருடம்

"அமெரிக்க ஜனாதிபதியாகக் கறுப்பர் ஒருவர் வரும் சாத்தியம் அதிக தொலைவில் இல்லை" என அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜோர்ஜ் புஷ் கறுப்பர் தலைவர்கள் மத்தியில் பேசும்போது சொன்னார்.

"கறுப்பர்கள் வாழும் பகுதிகளுக்கு நான் செல்லும்போதெல்லாம் அங்குள்ள பிள்ளைகளின் முகங்களைப் பார்த்து வியப்பதுண்டு. அவர்களில் ஒருவர் ஜனாதிபதியாக வரக் கூடுமோ என்று நினைப்பதும் உண்டு". இந்தப் பிள்ளை ஆபிரகாம் லிங்கனின் இலட்சியத்தை நிறைவேற்றுவானா? என்றெல்லாம் நினைத்துக் கொள்வேன் என்றும் கூறிய புஷ் மேடையில் தனக்கருகில் அமர்ந்திருந்த கறுப்பர் தலைவர் ஜெஸ்ஸி ஜெக்ஸனைப் பாத்து 'ஜெஸ்ஸி நான் சிறு பிள்ளைகளைப் பற்றியே சொன்னேன். 49 வயதானவர்களைப் பற்றிச்சொல்லவில்லை. எனவே அவசரப்படவேண்டாம் என்றும் தமாஷாகக் கூறினார்.

இக் கூட்டத்தின் ஆரம்பத்தில், அமெரிக்காவில் அடிமைகளுக்கு விடுதலை அளிக்கும் பிரகடனத்தில் ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் கைச்சாத்திட்டதை புஷ் நினைவு கூர்ந்தார்.

இது இவ்வாறு இருக்க, சிவில் உரிமைத் தலைவரான ஜெஸ்ஸி ஜெக்ஸன் இரு முறை ஜனநாயகக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக முயன்றார். 1992-ம் வருடம் ஜனாதிபதித் தேர்தலில் குடியரசுக் கட்சி வேட்பாளரான புஷ்ஷை எதிர்த்துப் போட்டியிடும் சாத்தியம் அவருக்கு உள்ளது என்று அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

# பியரில் மயங்கி கைதியை கோட்டை விட்ட காவலர்

கறுப்பு முகமூடியணிந்த தீவிரவாதிகள் சிறைச்சாலையில் நுழைந்து அவர்களது சகா ஒருவரை மீட்டுச் சென்றது தொடர்பாக விசாரணை நடத்துமாறு இச் சம்பவம் குறித்து மிகவும் ஆத்திரமுற்ற நிலையில் ஜனாதிபதி கொராசன் அக்கினோ உத்தரவிட்டுள்ளதாக மணிலாச்செய்திகள் தெரிவிக்கின்றன.

காவலாளிகள் சிறைச்சாலையில் குறிப்பிட்ட நேரம் மதுவருந்தி மகிழ்ந்ததே ஜனாதிபதியின் கோபத்திற்குக் காரணம் என ஜனாதிபதியின் பேச்சாளர் லுபெர் தெரிவித்தார்

சுமார் இருபது ஆயுதம் தரித்த முகமூடி நபர்கள் சிறைக்குள் புகுந்து சிறையில் இருந்த சகா கேணல் பிலிபிபிட்டை கூட்டிச் சென்றதாகக் கூறப்பட்டது,

கேணல் பிபிட் வழங்கிய பியரைக் காவலாளிகள் குடித்து கும்மாளமடித்ததாகவும் இச்சந்தர்ப்பத்தில் மேலும் நான்கு சாதாதாரணக் கைதிகளும் தப்பியுள்ளனர் என்றும் சிறை வார்டன் இராணுவத்தால் விலக்கப்பட்டார் என்றும் காவலாளிகள் மீது விசாரணை நடைபெறுவதாகவும் 'ராய்ட்டர்' செய்தித் தாபனம் தெரிவித்தது.

# லிதுவேனிய நிலைமை உடன் பேச்சு வேண்டும்

லிதுவேனியப் பிரச்சினை பற்றி உடனடியாகப் பேச்சு நடத்தும்படி அக்குடியரசின் பார்லிமென்ட் சோவியத் தலைவர் திரு. கொர்பச்சேவுக்கு விண்ணப்பித்திருக்கிறது.

லிதுவேனியா நிலைமை குறித்து கிரெம்ளின் கொண்டுள்ள கவலையையும் புதிய லிதுவேனியத் தலைவர்கள் பொருளாதார, கலாசார, மனிதாபிமான உறவைத்துண்டித்துக்கொள்ள விரும்பவில்லை என்பதையும் அங்கீகரிக்கும் தீர்மானம் சபையில் 82-9 வாக்குகளால் நிறைவேற்றப் பட்டது.

## ஜப். பிரதமர் வருகிறார்

ஜப்பானிய பிரதம மந்திரிதிரு தொஷிகிகைபூ உதியோக பூர்வமாக இலங்கை வர உளார்:

இம்மாதம் 28ம் திகதி முதல் 30ம் திகதிவரை அவர் இங்கு தங்கியிருப்பார் என வெளி நாட்டமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன;

## கௌரவம் கிடைக்கும்

மின்மாற்றி உப மின்நிலையம் அமைப்பதற்காக தமது காணியின் ஒருபகுதியை அன்பளிப்பு செய்துள்ள நடராஜா– சிவபாதம் என்பவர் கோப்பாய் வடக்கு கிராம முன்னேற்றசங்கத்தால் கௌரவிக்கப்படவுள்ளார். கோப்பாய் இராச வீதிச் சந்தியில் அமைக்கப்படவுள்ள இந்த மின் மாற்றி உப மின் நிலையத்தின் மூலம் இப்பகுதிக்கு இதுநாள்வரை இருந்து வந்த மின்சாரப்பற்றுக்குறை தீர்த்து வைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது (41)

# இன்று நாள் எப்படி?

மேடம்: தூரத்து செய்தியால் நன்மை, தேடியவர் வருகை, வாகன சுகம், வணிகர்கள் கடல் தொழில் செய்வோர் இலாபம்.

இடபம்: சகோதரவழியுதவி, வாக்குப் பலிதம், இலட்சுமி கடாட்சம், மாமன் வழியுதவி, புதுத்தொழில்.

மிதுனம்: உயர் பதவி, மாதா வழியுதவி, வணிகர்கள் கடல் தொழில் செய்வோர் இலாபம்.

கடகம்: தேடியவர் வருகை, வாகன சுகம், வணிகர்கள் கலைஞர்கள் இலாபம், புகழ் தேடிவரும்.

சிங்கம்: மாதா வழியுதவி, பணவரவு. நீண்டநாள்பிணக்கு தீரும், வாக்குபலிதம், சகோதரருதவி.

கன்னி: காதலர் மகிழ்ச்சி திடீர் விவாகம், புதுத் தொழில், கடற் தொழில் மூலம் இலாபம்.

துலாம்: புதுத் தொழில், உயர் பதவி, இரஜேமரியாதை, தேடியவர் வருகை, இலட்சுமி கடாட்சம்.

விருச்சிகம்: வாக்குப் பலிதம், வணிகர்கள் கடல் தொழில் செய்வோர் இலாபம், வாகன மாற்றம், இடப்பிரிவு.

தனுசு: உயர்பதவி மூலம் இடப்பிரிவு. தேடியவர் வருகை, சுகஜீவியம், வாகன இலாபம், விவாக நிச்சயம்.

மகரம்: வாகன இலாபம், சுகஜீவியம், நீண்டநாள் காதலர் ஒன்று சேருவர், தூரத்துச் செய்தியால், நன்மை.

கும்பம்: வாக்குக்கலகம், நீண்டநாள் அபிலாசை தீரும், பெரியோராசி, புதுத்தொழில், புகழ்தேடிவரும்.

மீனம்: விவாக நிச்சயம், உயர் பதவி, உத்தமர்கள் உறவு தூரத்து செய்தியால் நன்மை, இளைய சகோதர வழியுதவி.

யாழ். சோதிடர்
ச. அரியநாயகம்

## ரூபவாஹினி இவ்வார தமிழ்நிகழ்ச்சி

ஈஸ்ரர் திருநாளை முன்னிட்டு யாழ் திருமறைக் கலாமன்றத்தின் இரண்டு நிகழ்ச்சிகள் ரூபவாஹினியில் இம்மாதம் 12ம் திகதி வியாழக்கிழமையும், 13ம் திகதி வெள்ளிக் கிழமையும் ஒளிபரப்பப் படவுள்ளன.

12ம் திகதி மாலை 6. 55 மணிக்கு ஈஸ்ரர் இசைநிகழ்ச்சி ஒளிபரப்பாகும். எஸ். விஸ்வநாதன் இதனைத் தயாரித்துள்ளார்.

13ம் திகதி மாலை 6.55 க்கு 'களங்கம்' பக்தி இசைஉரை நாடகம் இடம்பெறும். இதனை எம். வரதராஜன் நெறிபடுத்தியுள்ளார்.

# விளையாட்டுச் செய்திகள்

## ஜிந்துப்பிட்டி பங்கு பற்றியது

யாழ். பல்கலைக் கழக விரிவுரையாளர் குழுவுக்கும், கொழும்பு ஜிந்துப்பிட்டி விளையாட்டுக் கழகத்திற்குமிடையிலான 20 ஓவர்களைக்கொண்ட சிநேகபூர்வமான கிரிக்கெட் போட்டியொன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்றது இந்தப் போட்டியினைப் பல்கலைக் கழக விரிவுரையாளர் திரு நந்தகுமார் ஏற்பாடு செய்திருந்தார் ஜிந்துப்பிட்டி விளையாட்டுக்கழகம் யாழ்ப்பரணத்தில் தங்கியிருப்பதற்கான ஏற்பாடுகளை "வெயரிங்ஸ் இன் லங்கா" நிறுவன நிர்வாகஸ்தர் திரு றெஜி ஏற்பாடு செய்திருந்தார். முதலில் துடுப்பெடுத்தாடிய பல்கலைக்கழகக் குழு 20 ஓவர்களில் 6 விக்கட் இழப்பிற்கு 123 ஓட்டங்களைப் பெற்றது. பல்கலைக் கழகக் குழுசார்பில் முரளி 25, கிருபாகரன் 24, பாலேந்திரா 23 ஓட்டங்களைப்பெற்றனர். ஜிந்துப்பிட்டிக் குழு 10 ஓவர்களில் சகலவிக்கெட்டுக்களையும் இழந்து 46 ஓட்டங்கள் மட்டும் பெற்றது.

## 'ஜங்ஸ்ரார்' சம்பியன்

எதிர்வரும் தமிழ்ப் புத்தாண்டை முன்னிட்டு, அரியாலை ஐக்கிய சன சமூக நிலைய விளையாட்டுக் கழகம்நடத்திய 12 ஓவர்கட்கு மட்டுப்படுத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டம், கடந்த 9 ஆம் திகதி அரியாலை காசிப்பிள்ளை விளையாட்டரங்கில் நடைபெற்றபொழுது: அரியாலை ஐக்கிய சனசமூக விளையாட்டுக் கழகத்தை ஈச்சமோட்டை ஜங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் தோற்கடித்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய அரியாலை அணி 10.2 ஓவர்களில் சகல விக்கற்றுக்களையும் இழந்து 43 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது ஒரு வீரராவது குறிப்பிடத்தக்க அளவு ஓட்டங்களைப் பெறவில்லை: பந்துவீச்சில் எஸ் ரவிகுமார் 3 ஓவர்கள் பந்து வீசி 13 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கற்றுக்களைக் கைப்பற்றினர். ஈச்சமோட்டை தனது துடுப்பாட்டத்தில், ஆடி 11. 2 ஓவர்களில் 4 இலக்குகளை மாத்திரம் பறிகொடுத்து வெற்றி இலக்கான 44 ஓட்டங்களைப் பெற்றுச் சாம்பியன் ஆனது, சாமுவல் தர்சன் 11 ஓட்டங்களையும், துரைசிங்கம் காந்தன் ஆட்டம் இழக்காமல், ஒரு ஆறு உட்பட 8 ஓட்டங்களையும், அணித் தலைவர் ஏ. ராஜேந்திரன் ஆட்டம் இழக்காமல் 9 ஓட்டங்களையும் பெறறுக்கொடுத்தனர். 71-வது சுதேசியத் திருநாளை முன்னிட்டுக் கிழக்கு அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தினரால் நடத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் போட்டியிலும் கடந்தவாரம் ஈச்சமோட்டை ஜங்ஸ்ரார் சாம்பியன் ஆனது இங்கு சுட்டிக் காட்டப்படவேண்டியதொன்றாகும் (16)

## கோவில்குள போட்டிகள்

கோவில் புதுக்குளம் றெக்கற் விளையாட்டுக் கழகம் நடாத்தும் புதுவருட விளையாட்டுவிழா இம்மாதம் 22-ம்திகதி ஞாயிற்றுக்கிழமை கோவில் புதுக்குளம் கிராம அபிவிருத்திச் சங்க மைத்தானத்தில் நடைபெறும். வனனித்தொகுதியினைச் சேர்ந்த வீரர்கள் கலந்து கொள்ளும் 65 மைல் சைக்கிள் ஓட்டப் போட்டி பிரதான நிகழ்ச்சியாக இடம் பெறும். இன்னும் பல விளையாட்டுகளும் இடம்பெறும் அன்று இரவு கலைநிகழ்ச்சிகளும் நடைபெறும். (11)

## விளையாட்டு அதிகாரி இல்லை

வடமாரட்சிப் பிரிவிலுள்ள மூன்று உதவி அரசாங்க அதிபர் பிரிவிகளிலும் விளையாட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப் படவில்லை கரவெட்டி உதவி அரசஅதிபர்பிரிவு, பருத்தித்துறை உதவி அரச அதிபர், பிரிவு மருதங்கேணி, உதவி அரச அதிபர் பிரிவு, ஆகிய பகுதிகளிலேயே விளையாட்டு உத்தியோகத்தர் இல்லை. தற்சமயம் விளையாட்டு அமைச்சினால் உதவி அரசாங்க அதிபர் பிரிவு தோறும் கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் நடாத்தப்பட்டுவருகின்றன இந்நிலையில் இவ்வுதவி அரச அதிபர் பிரிவுகளின் விளையாட்டு உத்தியோகத்தர்கள் நியமிககப்படாது இருப்பதுபெரும் குறையாக உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. வடமராட்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கழகங்களுக்கு இடையேயான விளையாட்டுப்போட்டி அண்மையில் நடைபெற்று முடிவுற்றது குறிப்பிடத்தக்கது. (43)

## அம்பன் விளையாட்டு போட்டி

அம்பன் அமெரிக்கமிசன் தமிழ்கலவன் பாடசாலை விளையாட்டுப்போட்டி இன்று புதன்கிழமை பாடசாலை அதிபர் திரு. பா. இரகுநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது: இப்போட்டிக்கு வடமராட்சிகிழக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. ரி சந்திரசேகரம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (50)

## கலைவாணி வெற்றிபெற்றது

யாழ். உதைபந்தாட்ட லீக்கினால் நடத்தப்பட்ட 13 வயதிற்குட்பட்ட வீரர்கள் கலந்து கொள்ளும் உதைபந்தாட்டப் போட்டியின் இறுதி ஆட்டம் கடந்த 8 ஆம் திகதி நடைபெற்ற பொழுது சென். அந்தனீஸ் விளையாட்டுக்கழக, 'பி' பிரிவு அணியை எதிர்த்து ஆடிய கலைவாணி விளையாட்டுக் கழக அணி 4:2 கோல்கள் என்ற கணக்கில் வெற்றியீட்டி சாம்பியன் ஆனது. பெரும் திரளான மக்கள் கண்டு களித்த இப்போட்டியில் ஆட்டநேரம் முடிவடையும் வரை இரு அணிகளும் ஒரு கோலைத்தானும் போடாததினால், 10 நிமிடங்கள் மேலதிகமாகக் கொடுக்கப்பட்டது. அந்த நேரத்திலும் இரு அணிகளும் எவ்வளவோ முயற்சித்தும் கோல்கள் எதையும் போட முடியவில்லை. அதன்பின் கொடுக்கப்பட்ட 5 பெனல்டி உதைகளில், சென். அந்தனீஸ் இரண்டு கோல்களையும், கலைவாணி அணி நான்கு கோல்களையும் பெற்றதினால் கலைவாணி சாம்பியன் ஆனது. ஆட்டம் தொடங்குவதற்கு முன்பதாக இரு அணி வீரர்களும், யாழ். உதைபந்தாட்ட லீக்கின் உபதலைவர்களில் ஒருவரும் போட்டிக்குழுவின் தலைவருமான திரு. எஸ். செபஸ்தியாம்பிள்ளைக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர்.

# செய்தி மஞ்சரி

## உடன் செலுத்தக் கோரிக்கை

பிரதேசசபை பேசாலை உப- அலுவலகத்திற்கு உட்பட்ட மின்சாரப் பாவனையாளர்கள் தங்கள் நிலுவைப் பணத்தை உடன் செலுத்தும்படி பேசாலை உப- அலுவலகப் பொறுப்பாளர் பேசாலை மின்சாரப் பாவனையாளர்களுக்கு பகிரங்க வேண்டுகோள் விடுத்துள்ளார். அல்லது அவர்களின் வீடுகளுக்கு வழங்கப்படும் மின்சாரம் தடைசெய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

## சிறுசுகள் சின்னத்தனம்

குருத்தலாவ புனித தோமையர் கல்லூரி வளவுக்குள் இருந்த மின்சார 'ரான்ஸ்போமர்' ஒன்று தீ வைசகப்பட்டது தொடர்பாகச் சந்தேகத்தின் பேரில் கல்லூரி மாணவர் நால்வரை வெல்மடைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். இந் நால்வரில் ஒருவர் கொழும்பைச் சேர்ந்தவர் என்றும் இருவரும் 14, 15 வயதினர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## விவசாயப் பயிற்சி நிலையம்

கிளிநொச்சியில் இயங்கும் தேசியசேவைகள் மன்றப்பயிற்சி நிலையத்தோடு இணைந்ததாக விவசாயப்பயிற்சி நிலையம் ஒன்றை அமைக்க இளைஞர் சேவைகள் மன்றம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இப்பயிற்சி நிலையத்தை அமைக்க சுவிஸ் அரசு இரண்டரைக்கோடி ரூபாவை உதவியாக வழங்கியுள்ளது.

இவ்விவசாயப்பயிற்சி நிலையம் மூலம் வட, கிழக்கு இளைஞர், யுவதிகள் பயனடைய வாய்ப்பு ஏற்படும் என்றும் இங்கு நான்கு சக்கர, இரண்டு சக்கர உழவு இயந்திரம், தெளிகருவி நீரிறைக்கும் இயந்திரம் போன்றவற்றின் பராமரிப்பு, பழுது பார்த்தல் போன்றபயிற்சிகள் அளிக்கப்படுமென்றும் தெரிவிக்கப்படுகிறது.

## ஐக்கிய செயற்பாடு

'எக்கால கட்டத்திலும் எமது ஆயுதங்களை நாம் ஒப்படைக்கவோ, கீழே வைக்கவோ மாட்டோம். மாபெரும் வல்லரசான இந்தியாவை நம்பி கடந்தகாலத்தில் ஆயுதத்தை ஒப்படைத்ததால் நாமும், தமிழ் மக்களும் அனுபவித்த கஷ்டங்களை நன்கறிவோம்.' என்று விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் திருமலை மாவட்ட அரசியற் பொறுப்பாளரான திரு. ரூபன் திருமலையில் நடைபெற்ற மாபெரும் பொதுக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

'தமிழீழ விடுதலைப் போராட்டம் இன்று புதுவலிமை பெற்று ராஜதந்திர, ஆயுத நடவடிக்கைகளில் நாம் ஈடுபட்டுள்ள வேளையில் தமிழ்- முஸ்லிம் ஐக்கியத்துடன் எமது செயற்பாடுகளை முன்னெடுத்துச் செய்வோம்' என்றும் சொன்னார்.

## வரட்சி விபரங்கள் சேகரிப்பு

வவுனியா மாவட்டத்தில் வரட்சி காரணமாக பாதிக்கப்பட்டுள்ள விவசாயக் குடும்பங்களின் விவரங்கள் திரட்டப்படுவதாக சமூக சேவைகள் பகுதியைச் சேர்ந்த உயரதிகாரி தெரிவித்தார். வரட்சிககரணமாக பயிரழிவுக்கான குடும்பங்கள் மற்றும் போதிய நீரின்மை காரணமாகவிவசாயம் மேற்கொள்ளப் படாதகாரணிகளைக்கொண்ட குடும்பங்கள் போன்ற விபரங்கள் தற்போது திரட்டப்பட்டு வருவதாகவும் வரட்சி தொடர்ந்து நிலவும் பட்சத்தில் மேலிடத்தின் தீர்மானத்திற்கு ஏற்ப வரட்சி நிவாரண உதவிகள் கிடைக்கலாம் எனவும் அவர் சொன்னார்.

## தபால்சேவகர் கைதானர்

வெளிநாட்டிலிருந்து தபாலில் வந்த 300 டொலர் வங்கிக் கட்டளையைத் திருடி, சமாதான நீதவானைக் கொண்டு போலியாகத் தயாரிக்கப்பட்ட ஆளடையாள ஆவணங்களை வங்கியில் ஒப்படைத்து. மாற்ற முயற்சி செய்தகொட்டாஞ்சேனை தபால் நிலைய தபால் சேவகர் கைதுசெய்யப்பட்டார். ஆளடையாளஆவணங்களில் சந்தேகம் கொண்ட வங்கி அதிகாரிகள் கொழும்பு மோசடி ஒழிப்பு பொலிஸாருக்கு அறிவித்ததைத் தொடர்ந்து மேற்படி நபர் கைது செய்யப் பட்டார், பொலிஸார் இவரிடம் இருந்து விநியோகிக்சப் படாத99 தந்திகளையும் கைப்பற்றினர். பெரும் பாலன தந்திகல் மரண செய்திகள் அடங்கிய தந்திகள் என பொலிஸார்தெவித்துள்ளனர்.

## பஸ் சேவை சீர்கேடு

நெடுங்கேணிக்கும் வவுனியாவுக்கும்இடையிலானஇ 'போ. ச. பஸ் போக்குவரத்து தொடர்ந்தும் சீர்கேடான நிலையிலேயே இருப்பதாக நெடுங்கேணிப் பகுதி மக்கள் அதிருப்திதெரிவிக்கின்றனர். சம்பந்தப் பட்ட அதிகாரிகள் இது விடயத்தில் உடனடி கவனம் மேற்கொள்ளவேண்டும். என்று கோரப்படுகின்றது.

## ரூபன் சிறப்பு விருந்தினர்

புத்தாண்டை முன்னிட்டு திருகோணமலை முற்ற வெளியில் நேற்று முன்தினம் பொலிஸாரின் ஏற்பாட்டில் பொலிஸாரும், மாணவரும் இணைந்து வழங்கிய தமிழ், சிங்கள, இசைநடன நிகழ்ச்சிகள் நடைபெற்றன. பிரதிப்பொலிஸ்மா அதிபர் திரு. ஆனந்தராசா பிரதமவிருந்தினராகவும் விடுதலைப்புலிகள் முக்கியஸ்தர் திரு ரூபன் பிரிகேடியர் வரல் வீர சூரிய ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டனர். இதே வேளை விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் பொதுக்கூட்டம் எதிர்வரும் 19 ம் திகதி திருகோணமலை நகரில் நடைபெறவுள்ளது. முக்கிய பிரமுகர்கள் உரையாற்றுவர்.

# எழில் கொஞ்சும் நகராக வவுனியா மெருகு பெறும்

மத்திய சூழல் அதிகாரசபையின் அனுசரணையுடன் வவுனியா மாவட்ட சூழல் குழு' வவுனியா நகரத்தை அழகுபடுத்துவதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

வவுனியாநகரப் பகுதிகளில் உள்ள முக்கிய சந்திகளைஒருங்கமைத்து வவுனியா ஆஸ்பத்திரி சந்திக்கும் குடியிருப்பு பிள்ளையார் கோயிலை அண்மித்த குளப்பகுதி வரையுமான இடப்பகுதியில் பூங்கா ஒன்றை அமைப்பதற்கான முன்னேடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதாக உள்ளூராட்சி உதவி ஆணையாளரும் மாவட்ட சூழல் சூழலின் செயலாளருமான திரு. ரி நாகேஸ்வரன் தெரிவித்தார்.

அத்துடன் வவுனியா நகர சபைப் பகுதிகளில் வடிகால்களை அமைப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளில் தேசிய நிர்வழங்கள் வடிகல் சபையின் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

சர்வதேச தொண்டர் நிறுவனம் ஒன்றின் நிதியுதவியுடன் மேற்கொள்ள உத்தேசிக்கப் பட்டுள்ள இத்திட்டத்திற்கு 3 தொடக்கம் 4 கோடி ரூபா வரையில் செலவாகலாம் எனவும் தெரிகிறது.

## தொலைக்கல்வி நேர்முகப்பரீட்சை 16-ம் திகதி நடைபெறும்

1990/ 1992 ஆம் கல்வியாண்டிற்கான, தொலைக்கல்விப் பயிற்சி நெறி பெறவிருக்கும் ஆசிரியர்களைத் தெரிவு செய்யும் நேர்முகப் பரீட்சை, இம்மாதம் 16 ஆந் திகதி காலை யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் அமைந்துள்ள தொலைக்கல்விப்பிரிவு அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்டத் தொலைக் கல்விப் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.எஸ் அலெக்ஸாண்டர் இது பற்றித் தெரிவிக்கையில்:-

வர்த்தமானிப் பத்திரிகை தாமதமாக வந்ததன் காரணமாகக், காலங்கடந்து விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சைக்குக் கடிதம் கிடைக்கப் பெறுதவர்களும், குறிப்பிட்ட திகதியில் இந்நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுமாறும்; இதுவரை விண்ணப்பிக்கத் தவறியவர்கள் 12 ஆந் திகதி காலை 8.00 மணி முதல், பிற்பகல் 3 00 மணி வரை தமது விண்ணப்பப்படிவங்களை; முதல் நியமனக்கடிதம்; பிறப்புச் சாட்சிப் பத்திரம், கல்விச்சான்றிதழ்கள், தேசிய அடையாள அட்டை, ஒழுக்காற்று நடவடிக்கை எதுவும் இற்றவர் என்கிற, அதிபரின் சிபாரிசுக் கடிதம் ஆகிய ஆவணங்களுடன் யாழ். தொலைக்கல்வி அலுவலகத்திற் சமர்ப்பித்துத் தங்களுக்குரிய நேர்முகப்பரீட்சைக் கடிதங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் குறிப்பிட்டுக் கூறினர்.

## நாளை

கொக்குவில் மேற்கு அருள்மிகு ஸ்ரீ வாராஹி அம்பாள் ஆலய புதிய சித்திரத் தேர் வெள்ளோட்ட விழா நாளை வியாழக்கிழமை பிற்பகல் நடைபெறவுள்ளது. சிறப்புரைகளும் இடம்பெறும்.

## மட்டக்களப்பில்

மட்டக்களப்பில் ஒவ்வொரு கிராமத்திலும் மூன்று உறுப்பினர்கள் கொண்ட இணக்க சபை உருவாக்கப்பட்டுள்ளது.

மேன்முறையீடு செய்வதற்கு இணக்கசபை நீதிமன்றமும் அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## பூநகரியில் உடற்கல்வி ஆசிரியர் ஒருவரும் இல்லை

பூநகரி முழங்காவில் இரு கொத்தணி அமைப்பிலும் ஐந்து பெரிய பாடசாலைகள் உட்பட இருபத்தைந்து பாடசாலைகள் இருந்தும் ஒரு பாடசாலையிலேனும் உடற்கல்வி ஆசிரியர்கள் இல்லாதிருப்பது குறிப்பிடத்தக்கது. பயிலுநர் ஆசிரியர்களாக உடற்கல்வி போதிப்பதற்குப் பலர் விண்ணப்பித்திருந்தும் பயிலுநர் ஆசிரியர்களாகக்கூட ஒரு உடற்கல்வி ஆசிரியர்களும் நியமிக்கப்படவில்லை. இக்குறைபாட்டைச் சுட்டிக்காட்டிப் பூநகரி ம.வி.பழைய மாணவர்சங்கத் தலைவரும், செயலாளரும் வடக்கு, கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளருக்கு மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளனர்.

## உல்லாசப் பயணிகள் பெருமளவில் வருகை

முன்னெப்போதும் இல்லாதவாறு அமைதி தவழும் இலங்கையை நாடி, வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் பெருமளவில் வருகைதர ஆரம்பித்துள்ளார்கள்.

ஏறத்தாழ 93% விதத்தால் அதிகரிதுள்ள உல்லாசப் பயணிகளின் வருகைத் தொகை சென்ற ஆண்டின் முதல் மூன்று மாதங்களின் 47,338 இலிருந்து. இந்த வருடத்தின் இதேகாலப் பகுதியில் 79,996 ஆக அதிகரித்துள்ளது.

இந்தத் துரிதகதியிலான இலங்கை உல்லாசப் பயணத்துறைமுன்னேற்றம், உலக உல்லாசப் பயணந்துறை முகவர்களை திருப்தியும், நம்பிக்கையும் அடைய வைத்துளளதுடன்.

எதிர்வரும் கார்த்திகை மாதத்தில்ஆசிய -பசுபிக்பிராந்திய விமானப் போக்கு வரத்துப் பணிப்பாளர் மாநாட்டையும் கொழும்பிலே நடத்துவதற்குரிய சூழ்நிலையையும் தோற்றுவித்துள்ளது

## இன்றைய நிகழ்ச்சிகள்

### இணுவிலில்

இணுவில்- மஞ்சத்தடி அருள்மிகு அருணகிரிநாதர் சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் மஹோற்சவ கால இன்றைய நிகழ்ச்சியாக மாலை 6 மணிக்கு சங்கீத வித்துவான் இராமநாதக் குருக்களின் இசைக் கச்சேரி நடை பெறவுள்ளது.

### இளவாலையில்

இளவாலை காந்தி கல்வி நிலையத்தில், இன்று புதன் கிழமை பி.ப 2 மணியளவில் ''பிரிவுபசார விழா'' ஒன்று நடைபெறவுள்ளது. கடந்த க.பொ.த சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றிய மேற்படி நிலைய மாணவர்களே காந்தி கல்வி நிலையத்தில் இப்பிரிவுபசார விழாவை ஒழுங்கு செய்துள்ளார்கள். இந்நிலையத்தின் பதினான்காவது க பொ. த சாதாரண மாணவர்களது பிரிவுபசார விழாவாக இது அமைந்துள்ளது. (25)

## ஆற்றலாளர் அரங்கு



நர்ச்சிமார் கோவிலடியைச் சேர்தவரும் யாழ். இந்துக் கல்லூரி மாணவனுமான சிதம்பரநாதன் ஸ்கந்தன் தன் வெற்றியினை வெளிக்காட்டாது அமைதியாக இருந்தார். அவரது எண்ணங்கள் இப்படி இருந்தன. நான் படித்து 4 ஏ எடுப்பேன் என்ற நம்பிக்கை எனக்கிருந்தது. நான் இதை முதலே எதிர்பார்த்தேன். இதை நான் சாதனை என்றுகூறமாட்டேன், என் வாழ்வில் வெற்றியின் ஒரு படி. நான் சாதிக்க வேண்டியது இன்னும் இருக்கிறது. ஆரம்பத்திலிருந்தே அயராது படித்து வந்த காரணத்தால் இப் பரீட்சைக்காக மிகவும் சிரமமெடுத்து படிக்கவேண்டிய கஷ்டம் எனக்கிருக்கவில்லை எதிர்காலத்தில் சிறந்த இருதய சத்திர சிகிச்சை நிபுணராக வர வேண்டும் என்பதே என் இலட்சியம் இது தொடர்பாக வெளிநாடுகளுக்கு போக நேரிடினும் - நிச்சயமாகப் போவேன். திரும்பி வருவேனு என்பது சொல்ல முடியாது நான் மருத்துவத் துறையைத் தேர்ந்தெடுத்த காரணம் நன்றாக உழைக்கலாம். ஆதோடு என் தாயாருக்கும் நான் டாக்டராக வரவேண்டும் என்பதே விருப்பம். கணக்குத் துறையைத் தேர்ந்தெடுத்து வந்த நான் செல்லவடிவேல் என்னும் ஆசிரியரிடம் விஞ்ஞானம் படித்தும் - எனக்கு விஞ்ஞானத்துறையில் நாட்டம் ஏற்பட்டது. சம காலப் பிரச்சனைகள் என்னை அதிகம் பாதிக்கவில்லை எந்த நேரத்திலும் என் பாடப் புத்தகங்களையும் குறிப்புகளையும்தான் முதலில் பாதுகாத்தேன் பிரச்சினையான காலங்களில் நான் எங்குமே தப்பிப்போக நினைக்கவில்லை. டியூசன் கல்வி பாடசாலைக் கல்வி இரண்டுமே எனக்கு உதவியாக இருந்தன ஆசிரியர்கள் அதிபர் உற்சாகம், நண்பர்களின் உதவி. இதனால் எனக்கு மனச் சோர்வு ஏற்படவில்லை. எப் பிரச்சனை ஏற்பட்டாலும் உறுதியாகக்கல்வியைத் தொடர வேண்டும் என்ற நம்பிக்கையுடன் செயற்பட்டதால் வேறு எதிலும் நான் பாதிக்கப்படவும் இல்லை என் கவனமும் வேறு எதிலும் செல்லவில்லை வேறு எதிலும் தனக்கு ஈடுபாடில்லை என்று தெரிவிக்கும் இவர் எமது கல்வி முறைகள் திருப்தியாக உள்ளதால் மாற்றங்கள் எதுவும் தேவையில்லை எனத் தெரிவித்துள்ளார் எதிர் காலத்தில் இவரது எதிர்பார்ப்புக்களும். இலட்சியங்களும் நிறைவேற 'முரசொலி' இனிதே இவரை வாழ்த்துகின்றது.

# மக்கள் வங்கி

## சித்திரை வருடப்பிறப்பு கைவிசேட நிகழ்ச்சி

வட பகுதியில் இயங்கும் 16 மக்கள் வங்கிக்கிளைகளிலும் இம்மாதம்

**14-ம் திகதி சனிக்கிழமை**

**காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணி வரை**

மேற்படி நிகழ்ச்சி இடம் பெறும். அன்றைய தினம் வங்கியில் வைப்புச் செய்யும் எமது வாடிக்கையாளர்களுக்கும், புதிய வாடிக்கையாளர்களுக்கும் வைபவ ரீதியாகக் கிளை முகாமையாளரினால் கைவிசேடம் வழங்கப்படும்.

### ★ புதுவருடச் சலுகை ★

மக்கள்வங்கி வழங்கும் 2 வருட கைமாற்றக்கூடிய சேமிப்புச் சான்றிதழ்களை இம்மாதம் 14–ம் திகதி வரை 3 வீத வரிவிதியைச் செலுத்தாமல் வாடிக்கையாளர்கள் மக்கள் வங்கிக்கிளையில் பெற்றுக்கொள்ளலாம்.

### ♣ ஓர் நற்செய்தி ♣

கைமாற்றக்கூடிய சேமிப்புச் சான்றிதழ்களின் நடைமுறை வட்டிவீதம் 16.3 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

ரூ. 8,600/- 12 மாதங்களுக்கு முதலிட்டு முதிர்ச்சியின்போது ரூ. 10,000/- பெற்றுக் கொள்ளமுடியும்.

மக்கள் வங்கி
பிராந்தியத் தலைமையகம்
யாழ்ப்பாணம்

பிராந்திய முகாமையாளர்

04079

பாராளுமன்றத்தில் ம. ஐ. மு. எம். பி.

# முகத்தில் மட்டுமல்ல கொள்கையில் மாற்றம் ஏற்பட்டாக வேண்டும்

"மந்திரிசபையில் முகங்கள் மாறினால் மாத்திரம்போதாது. கொள்கையும் மாறவேண்டும்" என்றுதிரு .பந்துலகுணவர்தனஎம்.பி.பாராளுமன்றத்திற் பேசுகையில் கூறினர்.

"இந்நாட்டில் உள்ள ஒவ்வொருவரும் தலாபத்தாயிரம் ரூபா வெளிநாட்டுக் கடனளியாக இருக்கின்றனர். இந்த நிலையைப் புதிய மந்திரி சபை மாற்ற வேண்டும்." என்றும் அவர் வற்புறுத்தினர்.

இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் மீது இடம்பெற்ற விவாதத்தில் அவர்கலந்துகொண்டார்.

மக்கள் ஐக்கிய முன்னணி எம். பி. யான அவர் தொடர்ந்து பேசுகையில். "உள்நாட்டுவர்த்தகர்கள் பக்கம் நியாயமாக நிற்க வேண்டிய அவசிய நிலை அரசுக்கு இப்போது ஏற்பட்டுள்ளது. முஸ்லிமோ, தமிழரோ, சிங்களவரோ வர்த்தகர் இலங்கையராக இருந்தால் அரசு அவரது வர்த்தக முயற்சியைப் பாதுகாக்க வேண்டும். பல்தேசியக் கம்பனிகளின் ஆதிக்கத்தை உள்நாட்டவர் முறியடிக்க உதவ வேண்டும்.

சில உற்பத்திப் பொருட்களைப் பொறுத்த வரையில் பல்தேசிய நிறுவனங்கள் தனி ஆதிக்கம் செலுத்துகின்றன. உள்நாட்டுவர்த்தகர்கள் அவர்களுடன் போட்டி போட முடியாத நிலை உள்ளது.

மக்களின் வாழ்க்கைச் செலவு கூடுகின்றது. பசி அதிகரிக்கின்றது பொருள்களின் விலை கூடிக்கொண்டே போகின்றன. மந்திரிசபையில் முகங்கள் மாறினால் போதாது. கொள்கை மாறவேண்டும் அப்போது தான் பிரச்சினைகள் தீரும்" என்றார்.

## மேற்பார்வையாளர் வேதனம் மேலும் அதிகரிக்கும்

தற்போது நடைபெற்றுவரும் க. பொ. த சாதாரண தரப் பரீட்சைக்கு இணைப்பு அதிகாரிகளாகவும் மேற்பார்வையாளர்களாகவும், நிரந்தர நோக்குநர்களாகவும் நோக்குநர்களாகவும் கடமை புரியும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகள் இவ்வருடத்தில் இருந்து அதிகரிக்கப்படலாம் என நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவ்விடயம் சம்பந்தமாக இணைப்பு அதிகாரி ஒருவரிடம் வினவிய போது, தங்களுக்கு வழங்கப்பட்டுவரும். கொடுப்பனவுகள் மிகவும் குறைவு எனவும் மாணவர்களின் எதிர்காலத்தைக் கருத்திற் கொண்டே தாங்கள் சேவை மனப்பான்மையுடன் வேலை செய்வதாகவும். தங்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட வேண்டியது அத்தியாவசியமானதாகும் என்றும் குறிப்பிட்டார். (43)

## மட்டு. விவசாயிகளுக்கு வட்டியில்லாக் கடன்

மட்டக்களப்பு விவசாயிகளுக்கு மக்கள் வங்கி வட்டியில்லாக் கடன் கொடுக்க முன்வந்துள்ளதாக அவ்வங்கியின் முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

உரவிலை இரட்டிப்பாக உயர்ந்துள்ளதால் தலைமையகத்தில் இருந்து இதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## கிளிநொச்சியில் நிவாரணம்

கிளிநொச்சி இலங்கை வங்கிக் கிளையில் வன்செயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முப்பத்தியிரண்டு லட்சம் ரூபா வழங்கப்பட்டது.

நீண்டகாலமாக இம் மாவட்டத்திற்கு நிவாரணக் கொடுப்பனவுகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன வங்கி அதிகாரிகளின் முயற்சியால் இக் கொடுப்பனவு பாதிக்கப்பட்ட சுமார் 854 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டது.

## புதுவருட ஆராதனை

தொண்டமானாறு செல்வச் சந்நிதிஆலயத்தில்14ஆம்திகதி சனிக்கிழமை சித்திரை புதுவருடப் பிறப்பு விசேட உற்சவம் நடை பெறவுள்ளது.

## தெல்லிப்பழையில் சான்றிதழ் வழங்கும் வைபவம்

தெல்லிப்பழை சமூக சுகாதாரபயிற்சி நிலையத்திலிருந்து பயிற்சிமுடிந்து வெளியேறும் பயிற்சியாளர்களுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவம் இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு தெல்லிப்பழையில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெறும்.

வடகிழக்குப் பகுதிகளைச் சேர்ந்த 92 பயிற்சியாளர்கள் இப்பயிற்சியைப் பெற்றுள்ளனர் இவர்களுள் 64 பேர் கிராமிய சுகாதார உதவியாளர்களாகவும், 28 பேர் சுகாதார தரிசிப்பாளர்களாகவும் பயிற்சி பெற்றுள்ளனர்.

## பொலிகண்டி கந்தன் அச்சேற்றுவிழா

கடந்த ஞாயிற்றுக்கிழமை பொலிகண்டிக் கந்தனுக்குச் சித்திரத்தேர் செய்வதற்கான ஆரம்ப அச்சேற்றும் வைபவம் நடைபெற்றது. யாழ் மாவட்ட நீதிபதி திரு. பொ. பாலவடிவேல் தலைமைவகித்து அச்சேற்றும் வைபவத்தை ஆரம்பித்துவைத்தார்.

## நடவடிக்கை

சங்கானை பட்டின சபை எல்லைக்குள் சட்ட விரோத மின் பாவனையாளர்கள் மீது கடும் நடவடிக்கை எடுப்பதற்கான முடிவினை பட்டின சபையினர் நடைமுறைப்படுத்துகின்றனர்.

சட்ட விரோதமாக மின்சார பாவனையில் ஈடுபடுபவர்களிடமிருந்து அதற்கான உபகரணங்கள் பறிமுதல் செய்யப்படுமெனவும், இரண்டாயிரம் ரூபா தண்டப் பணமாக அறவிடப்படுமெனவும் பட்டின சபை எச்சரிக்கை விடுத்துள்ளது.

சட்ட விரோத மின்பாவனையால் பட்டினசபை பெருமளவு நட்டமடைந்ததுடன் சட்டபூர்வ பாவனையாளர்களும் பாதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது. (30)

## சுவையான செய்திகள்

### மானம் கப்பலேறியதால்..

பொது இடங்களிற் கள்ளச் சாராயம், மது வகைகள் போன்றவற்றைப் பயன்படுத்துவதைச் சாம்பூர் என்ற இடத்தில் பொது மக்களே தடுத்ததுடன் பலரைத் திருத்தியும் விட்டார்கள். எப்படித்தெரியுமா? அண்மையிற் சில டாக்டர்கள், அரசு அதிகாரிகள் போன்றவர்களைக் குடித்திருந்த நிலையிற் பிடித்து அவர்களை நடுத்தெருவில் பலர் முன்நிலையில் தோப்புக் கரணம் போடச்செய்து விட்டார்கள். இப்படிப் பெரிய பதவியில் உள்ளவர்கள் மானம் நடுத்தெருவில் கப்பலேறியதால் பலர் மது அருந்துவதைச் சுத்தமாக விட்டுவிட்டார்கள்.

### மரத்திற்கே நிலம் சொந்தம்

எந்த மரமாவது "இது என் சொந்த இடம், அதில் தான் நிற்கின்றேன்" என்று சொல்ல முடியுமா? முடியும். அமெரிக்காவில் உள்ள ஒரு நகரின் நூற்றாண்டுவிழா 1575 இல் கொண்டாடப்பட்டது. அப்போது ,ஒரு வெள்ளை ஓக் 'மரம்' நடப்பட்டது நிலத்தின் சொந்தக்காரரான ஜான்சன் நிலத்தை மரத்திற்கே உரிமையாக்கிப் பத்திரம் செய்தார். நிலம் மரத்திற்குச் சொந்தமாகி விட்டது.

### கவலைப்படாதீர்..தலை நரைக்கும்

ஒரே நாளில் மனிதன் தலைமுடி நரைக்குமா? நரைக்கும். அளவிற்கு அதிகமான கவலை ஏற்பட்டால்... கொலம்பஸ் அமெரிகாவைக் கண்டு பிடிக்கச்சென்றபோது ஒரு நாள் அவரது கப்பல் வாசிகள் "இனிமேல் கடற்பயணம் செய்ய முடியாது, உடனடியாகத் தாயகம் திரும்ப வேண்டும்" என்று கிளர்ச்சி செய்தனர். தனது முயற்சி பயனற்று விடுமோ என்ற கவலையில் ஆழ்ந்து விட்டார். கொலம்பஸ். மறுநாட் காலையில் பார்த்தபோது கொலம்பஸின் தலைமுடி எல்லாம் நரைத்திருந்ததாம். ஜாக்கிரதை... கவலைப் படாதீர்கள். தலை நரைக்கும்.

## முரசொலிக்கு வந்த கடிதம்

### யாழ். ஆங்கில ம. வ. சங்கம் தரும் அறிவுறுத்தல் இது

ஆசிரியர்
முரசொலி

மருந்து வகைகளின் பாவனை எல்லாம் முன்னேற்றமடைந்த நாடுகளிலும் கட்டுப் படுத்தப்பட்டிருக்கிறது மருந்துகள் சரியான முறையில் பாவித்தல்வேண்டும். அவைகளை விநியோகிக்க முன்னர் ஒரு தகுந்த வைத்தியரிடம் ஆலோசனை பெற வேண்டும். இல்லாவிட்டால் பாரதூரமான தாக்கங்களை மருந்துகள் ஏற்படுத்தலாம். ஆகையினால் எமது மக்களின் எதிர்கால வாழ்வு கருதி பின்வரும் குறிப்புகளை எம்மக்கள் அவதானிக்க வேண்டும் என்று பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

மருந்து வகைகள்

(1) சாதாரண பாவிப்பு மருந்துகள் (உ-ம்) அஸ்பிறின், பரசிட்டாமோல் போன்றவை சாதாரண மக்கள் வாங்கிப் பாவிக்கலாம்.

(2) ஒரு வைத்தியரின் ஆலோசனை பெற்று பாவிக்கவேண்டியவை. இவற்றை ஒரு தகுந்த வைத்தியரின் ஆலோசனையைப் பெற்றுக் கொண்டபின் பாவிக்கவேண்டும்.

(3) போதைஉண்டாக்கக்கூடிய மருந்துப் பொருட்கள் சம்பந்தமானவை கட்டாயமாக வைத்தியரின் ஆலோசனைப்படி பாவித்தல் வேண்டும்.

விற்பனை நிலையங்கள்

( 1) மருந்துகளை விற்பனை செய்யும் நிலையங்கள் அனைத்தும் பதிவு செய்யப்படல் வேண்டும்.

( 2) நிலையப் பொறுப்பானவர் பயிற்சி பெற்ற மருந்துகள் சம்பந்தமான அறிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.

( 3) மருந்துகளை நல்லமுறையில் களஞ்சியப்படுத்தி இருத்தல் வேண்டும்.

( 4) மருந்துச் சிட்டைகளை தகுந்த வைத்தியரிடம் பெற்றவர்களுக்கு மாத்திரம் மருந்துவகை (2) (3) பகுதிகளில் உள்ள மருந்துகள் விநியோகித்தல் வேண்டும்

( 5) விநியோகம் சம்பந்தமான பதிவுகள் பார்வைக்கு எப்போதும் வைத்திருத்தல் வேண்டும்.

(6) பழுதான அல்லது காலம் கடந்த மருந்துகளை விநியோகித்தலாகாது.

( 7) தரமான மருந்துகளையே விநியோகித்தல் வேண்டும்.

( 8) மருந்துகளை கட்டுப்பாடு விலை அல்லது தயாரிக்கும் ஸ்தாபனத்தின் சில்லறை விலைக்குக்கூட விற்றலாகாது. விலைப் பட்டியல் எப்போதும் இருத்தல் வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட கம்பனிகள் அல்லது ஸ்தாபனங்கள் தரும் மருந்துகளை விநியோகிப்பதுடன் விலைப்பட்டியலும் இருத்தல் வேண்டும்.

( 9) மருந்துச் சிட்டையில் எழுதப்பட்டிருக்கும் மருந்தையே அவிற்பனை செய்தல் வேண்டும். அது இல்லாதிருப்பின் வைத்தியரின் அனுமதியுடன் அதற்கு சமமான மருந்தை விநியோகிக்கலாம்.

(10) கூடியளவு விலை குறைந்த, தரமான மருந்துகளை விநியோகிக்க எத்தனித்தல் வேண்டும் பொதுப்பெயரை சிட்டையில் எழுதியிருந்தால் அவ்வாறு விநியோகிக்கலாம். கம்பனிப் பெயர் சிட்டையில் குறிப்பிட்டிருந்தால் அதையே கம்பனி விலையில் கொடுக்கலாம்.

(11) மருந்தை விநியோகிக்கும்பொழுது ஒரு சிட்டையில் குறிப்பிட்டமருந்துகள்ஒரேமுறையேவிநியோகித்தல் வேண்டும். அதில் விநியோகித்த கையொப்பமும் அடையாள முத்திரையும் இடப்பட வேண்டும்.

(12) தொடர்ந்து மருந்து எடுப்பவருக்கு அதற்கான அனுமதிச் சிட்டையை வழங்கும் வைத்தியர் அத்தாட்சிப் படுத்துதல் வேண்டும்.

பொருளாதார ரீதியாக பாதிப்படைந்த எம் மக்களுக்கு தரமான மருந்துகளை குறைந்த விலையில் விநியோகிக்க நடவடிக்கை எடுக்க உதவுமாறு வேண்டுகிறோம். உலகச் சந்தையில் கிடைக்கும் பல்வேறு மருந்துகளின் தரம், விலை அறிந்து எமக்கு ஏற்றவையை பாவித்தல் வேண்டும். மற்றும் மருந்து விநியோகிப்போர் தம்மைப் பாதிக்காத வகையில் சில்லறையை கூடியளவு குறைத்து (வியாபார கழிவின் ஒரு பகுதியை விட்டுக் கொடுத்து) மக்கள் பயன்பெற உதவிறும் விரும்பத் தக்கது.

சிவஞானம் ஸ்ரீ கணேஷன்
செயலாளர்
யாழ் ஆங்கில மருந்து வர்த்தகர் சங்கம்


## பிரயாண ஒழுங்குகள்

★ ஜேர்மனி

★ இத்தாலி

ஆகிய நாடுகளுக்கு போக விரும்புபவர்கள் எம்மைத் தொடர்பு கொள்ளவும்

★ ஈராக் (அரசாங்க வைத்தியசாலை)

ஈராக் நாட்டுக்கு பின்வரும் வெற்றிடங்கள் உள்ளன.

| | | | சம்பளம் |
|---|---|---|---|
| 01. | ஆங்கில வைத்தியர் | (2) | I.D 250 |
| 02. | ஆண் தாதி (மேல் நேர்ஸ்) — | (4) | I.D 140 |
| 03. | தொழிலாளர் — | (40) | I.D 80 |

5வருட ஒப்பந்தம் உணவு இருப்பிடம் வைத்தியம் இலவசம்

V.T.R. TRAVELS
41, 3rdCross Street Jaffna:

04042

# 90-ம் நாள் நினைவஞ்சலி

அரும்பாய்: 26 | 09 | 1963



வித்தாய்: 11 | 01 | 1990

## மேஜர் சோதியா

(மைக்கல் மரி அமலோற்பவ வசந்தி – கரவெட்டி)

தாண்டு போயிருந்த
தமிழன் உரிமைகளை
தோண்டி எடுக்க
துப்பாக்கி எடுத்தவளே...!

அதிகாலை ஒன்றிற்காய்
அஸ்தமித்த வேளையில்
உலகத்தின் உள்ளத்தில்
உதயமாகி விட்டாய்

சோதியா...
சரித்திரத்தின் பிரசவிப்பில்
சாய்ந்துபோன கோபுரம்
சரிந்து கிடந்த சந்ததியை

நிமிரச் செய்த
நெம்பு கோல்

சரித்திரத்தில் உன்சாவு
சகிக்க முடியாதுதான்
ஆனாலும்
சமாளித்துக் கொண்டோம்

இறப்புகள் தொடர்ந்து
இதயம் வருந்தினாலும்
இலக்கை நோக்கியே
கால்கள் விரையும்
கரங்கள் உயரும.

- விடுதலைப்புலிகள்மகளிர்முன்னணி

04108

# புனர்வாழ்வு அமைச்சின் ஆலோசகர் யாழ்ப்பாணத்தில்

யாழ். மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு வேலைகளை பார்வையிடுவதற்காக புனர்வாழ்வு அமைச்சின் ஆலோசகர் திரு. கே. தயாபரன் யாழ்ப்பாணத்திற்கு விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

இங்கு புனர்வாழ்வு அமைச்சின் கீழ் வழங்கப்படும் நிவாரணக் கொடுப்பனவுகள் தாமதமாகவே வழங்கப்பட்டு வருவதாகவும் கடந்த மாதத்தில் இருந்தே இது விரைவுபடுத்தப்பட்டுள்ளதென்றும் அவர் தெரிவித்துள்ளார். (03)

# வீடமைப்புக் கடன் 15,000 ரூபா விண்ணப்பப் படிவம் விநியோகம்

தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் வழங்கப்படவுள்ள பதினையாயிரம் ரூபா வீடமைப்புக் கடனுக்கான விண்ணப்பப் படிவங்கள் யாழ் மாநகர சபையூடாக தற்போது வழங்கப்பட்டு வருகின்றன.

இதுவரை சுமார் ஐந்நூறு படிவங்கள் வழங்கப்பட்டு விட்டன. இப்படிவம் வழங்கும் வேலைகள் மூன்று வாரங்களுக்கு மட்டுமே நடைபெறும் என அறிவிக்கப்படுகிறது.

பதினைந்து லட்சம் வீடமைக்கும் திட்டத்தின். ஓமேயே இவ் வீடமைப்புக் கடன் வழங்கப்படவுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (4)

நல்லூர் உண்ணாவிரதக் கூட்டத்தில் ஆஞ்சநேயர் உரை

# தமிழீழப் போராட்டத்தின் இதயநாதம் அன்னைபூபதி

"கண்ணீரும் செந்நீருங் கட்டுக் கடங்காமற் பாய்ந்து, பாய்ந்து சிவப்பேறி உரம் பெற்ற மாபெரும் புனிதத் தன்மை வாய்ந்த விடுதலைப் போராட்டத்தின் விளை நிலமே, நமது தமிழீழத் தாயகம் அதை மேலும் உறுதிப்படுத்தி நிற்கின்ற உச்சமான போராட்டப் பிரதி நிதியும், ஈழவிடுதலைப் போராட்டத்தின் இதய நாதமும் ஆக எங்கள் அன்புக்குரிய அன்னைபூபதிவிளங்குகின்றார்."

இவ்வாறு நேற்றுக் காலை தொடக்கம் மாலை வரை நல்லூரில் நடைபெற்ற அன்னை பூபதி நினைவு உண்ணாவிரதப் பொதுக்கூட்டத்தில் வலிகாமப் பகுதி விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணிப் பொறுப்பாளர் திரு.சி.ஆஞ்சநேயர் பேசும் போது குறிப்பிட்டார். அத்துடன் பல விடுதலைப்புலிகளின் பிரமுகர்களும் இதில் கலந்து கொண்டு பேசினார்கள். இவ்வுண்ணாவிரதத்தில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

"அங்கு ஆஞ்சநேயர் தொடர்ந்து பேசுகையில் ஆதிக்க அடக்கு முறைகளால் நமது ஈழத்தாயகத்தை அடிமைப்படுத்த நினைக்கும் எந்தவொரு அதிகார வர்க்கத்திற்கும் எதிராகப் போர்க் கொடி தூக்கிப் பொருதுவதிலே தமிழீழ விடுதலைப் புலிகள் தயங்கியதேகிடையாது. அத்தகைய நமது போராட்டத்தின் ஒரு உன்னதமான உயிர் தியாக வடிவந்தான் அன்னை பூபதி எங்கள் விடுதலைப் போராட்ட நெடும் பாதையும்,நாம் சந்தித்துக் கடந்து வந்த களங்களும் உலக விடுதலைப் போராட்டங்களுக்கெல்லாம் உயர் முன்னோடித் தடயங்களாகும். இளமை தரும் இனிய உணர்வுகளையும் அது தரும் வசந்த சுகங்களையும்' ஈழவிடுதலைப் போராட்டத்திற்காக தாரை வார்த்துக் கொடுத்த,தன்னலங் கருதாத தலைசிறந்த போராளிகள் இந்தத் தமிழீழ விடுதலைப்புலிகள் என்றார்.

கொழும்பு செட்டியார்தெரு

# நகைக்கடையில் கொள்ளை முயற்சி இரு தமிழ் இளைஞர்கள் கைது

கொழும்பு செட்டியார் தெரு நகைக்கடை ஒன்றில் கொள்ளையில் ஈடுபட முனைந்தவர்கள் தமிழ் இளைஞர்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த வியாழன் இரவு நடைபெற்ற இக்கொள்ளை முயற்சியில் இரு இளைஞர்கள் பொலிஸாரிடம் அகப்பட்டுள்ளனர். சம்பவ தினம் குறிப்பிட்ட நகைக்கடை பூட்டப்பட்டுக் கொண்டிருந்த சமயம் ஆயுதபாணிகளாக வந்த இவ்விளைஞர்கள் கடையின் இரும்புப்பெட்டியை திறக்க முயற்சித்தனர் அது பலிக்காமல் போகவே பெட்டியின் சாவி உள்ள கடை உரிமையாளரின் வீட்டிற்கு இவர்கள் திரும்பிச் சென்றனர் அங்கிருந்து இவர்கள் திரும்புவதற்குள் பொலிஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்டது. மீண்டும் வந்த இளைஞர்கள் கடையில் புகமுயன்றபோது பொலிஸாரிடம் வகையாக மாட்டிக் கொண்டனர். எனினும் ஓர் இளைஞர் தப்பிவிட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் தொடர்ந்து விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

கல்விப்பணிப்பாளர் அறிவிப்பு

# பயிலுநர் ஆசிரியர் தெரிவுப் பிரச்சினைகள் தீர்க்கப்படும்

பயிலுநர் ஆசிரியர் விடயத்தில் மேன் முறையீடு செய்தோரின் பிரச்சினைகள் சுமுகமாக தீர்க்கப்படும் என யாழ் கல்விப்பணிப்பாளர் திரு இரா சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார்.

இதை ஆராய்வதற்கு ஆசிரியர், அதிபர், பழையமாணவர்கள் ஆகியோரின் அமைப்புப் பிரதிநிதிகளும் உதவி அரசாங்கஅதிபர் கல்வித்திணைகள உத்தியோகத்தர் ஆகிய ஐவர் கொண்ட கமிட்டியொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சொன்னார். (04)

# புதுவருட வியாபாரம் கிளிநொச்சியில் அதிகரிப்பு

கிளிநொச்சி நகரில் உள்ள பொதுச் சந்தையில் புதுவருடத்தை முன்னிட்டு அதிகளவில் நடைபாதை புடவை வியாபாரிகள் வியாபாரம் செய்து வருகின்றதுடன் தென் பகுதியிலிருந்தும் நீண்ட காலத்தின் பின் லொறிகள் வருகை அதிகரித்துள்ளது.

கடந்த வன் செயல்கள் காரணமாக பல வருடங்களாக கிளிநொச்சி சந்தைக்கு சிங்கள வியாபாரிகள் வருவதில்லை, நாட்டு நிலைமைசீரானதைத் தொடர்ந்து லொறிகளிலும், ரயில்மூலமாகவும் பெருந்தொகை வியாபாரிகள் வந்து போகின்றனர்.

இதனால் உள்ளூர் உற்பத்திப் பொருட்கள் பெருமளவில் விற்பனை நடைபெற்று வருகிறது. சிங்களவர்கள் எதுவித அச்சமும் இன்றி கிளிநொச்சி சந்தையில் வியாபாரம் மேற்கொண்டு செல்கின்றனர் (35)

# வடக்கு கிழக்கில் 25வருடமாக புதியவைத்தியசாலைகட்டவில்லை

கடந்த 25 வருடங்களாக வடக்குக் கிழக்குப் பகுதிகளில் புதிய அரசவைத்தியசாலைகள் எதுவும் அமைக்கப்படாதுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது

வடக்கு கிழக்குப்பகுதியில் ஒரு சில நவீனவைத்தியசாலைகள் அமைக்கப்படுவது பற்றி அரசிடம் திட்டம் உள்ள போதும அது இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை.

வடக்குக்கிழக்குப்பகுதிகளில் உள்ள 24லட்சம் மக்களுக்கு தற்போது உள்ள வைத்தியசாலைகள் போதாது என தெரிவிக்கப்படுகின்றது. (03)

கடந்த ஏப்ரலில்

# கந்தர்மடம் குண்டு வெடிப்பில் பலியானவருக்கு நினைவாலயம்

கடந்தவருடம் ஏப்ரல் 14 ஆம் திகதி கந்தர்மடத்தில் இடம்பெற்ற வெடிகுண்டு விபத்தில் கொல்லப்பட்டவர்கள் நினைவாக நினைவாலயம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இந் நினைவால்யத்தில் இறந்தவர்களின் பெயர் விபரங்கள் பொறிக்கப்படவிருப்பதால் இறந்தவர்களின் உறவினர்கள் அவர்களின் பெயர் விபரங்களை 94, பழம் வீதி, கந்தர்மடம் ஆலடிச்சந்தி திரு. கே. கனகசபாபதியிடம் எதிர்வரும் வியாழக்கிழமைக்கு முன்னர் கொடுத்துதவுமாறு கேட்கப்படுகின்றார்கள்.

ஈ பி ஆர் எவ்...

த்தோடுதான் எமது உறுப்பினர்களை வெளியேறச் செய்தோம் என அபுயூசுப் கூறினார்.

மின்சாரம்...

வசதி செய்து கொடுக்கப்படும் என்று உள்ளூர்ப் பத்திரிகை ஒன்றில் வந்த செய்தி பிழையானது என்றும் ஆணையாளர் தெரிவித்தார், ஏனெனில் நமது சூழலில் பாரம் பரியமாக பேணப்பட்டு வருகின்ற முறைகளை மாற்றுவதெனில் அந்த முடிவை தனித்து நின்று தாம் எடுக்க முடியாதெனவும், பெரியோர்களால் கூடி எடுக்கப்பட வேண்டிய முடிவு இது எனவும் அவர் கூறினார் (04)

றிசோர்வ்...

களின் மூலப்பிரதிகளை கொண்டுவருதல் வேண்டும்.

யாழ். கிளிநொச்சி பிரதேசங்களிலிருந்து றிசேர்வ் பொலிஸ் பதவிகளுக்கு ஏற்கனவே சுமார் 2500 பேர் விண்ணப்பித்துள்ளனர். தகுதியுடைய அனைவரும் உச்சவரம்பின்றி சேவைக்கு உடனடியாகச் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

இதுவரை, நிரந்தர பொலிஸ் பதவிக்கு விண்ணப்பித்தோருக்கான நேர்முகப் பரீட்சை பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படுமென பொலிஸ் நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன,

நேர்முகப் பரீட்சைகளை நடாத்தவென பொலிஸ் அதிகாரிகள் குழுவொன்று 19-ம் திகதி காலை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வரவுள்ளது.

போலி...

ஏதோ ஓர் வழியில் தமக்கு கிடைத்து வருவதாகவும் அவர் கூறினார்.

பயிலுநர்ஆசிரியர்களின்சேவையில் நான்குவருடகாலத்திற்குள் பிழையான ஆவணங்கள் சமர்பித்தோர் கண்டுபிடிக்கப்பட்டால் சட்டப்படி அவர்கள் நியமனம் ரத்தாகலாம் என அவர் தெரிவித்தார். (04

வடபிராந்திய சுகாதார சேவை திணைக்களம்

# 1989 புனரமைப்புத் திட்டத்தில் மருந்தகங்களுக்கு நிதி ஒதுக்கீடு

வடபிராந்திய சுகாதார சேவைத்திணைக்களத்தின்1989ம் ஆண்டுக்கான புனரமைப்புத்திட்டத்தில் அளவெட்டி மத்திய மருந்தகம், உடுவில் மத்திய மருந்தகம், அச்சுவேலி உதவி வைத்திய அதிகாரி விடுதி என்பனவற்றிற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதற்கான வேலைகள் விரைவில் ஆரப்பிக்கப்படவுள்ளன இதேவேளை மருதங்கேணி பிரசவ விடுதி மந்திகை வைத்தியசாலை போன்றன புனரமைப்பு செய்வதற்கு 15லட்சத்து 26ஆயிரம் ரூபா ஒதுக்கும்படி கேட்கப்பட்டுள்ளது.(03)

உ அ அதிபர்...

அல்பிரட்டினால் திறந்து வைக்கப்பட்டது.

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பணிமனையின் கட்டட வேலைகள் எதிர்வரும் 20-ம் திகதியளவில் பூர்த்தியாகவுள்ளன.

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு ஒதுக்கப்பட்ட 8. 5 லட்சம் ரூபாவில் புதிய கட்டடம் ஒன்று விரைவில் நிர்மாணிக்கப்படவுள்ளது அத்துடன் மற்றைய உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளும் திருத்தப்படவுள்ளன. (03)

# இன்று நெல்லியடியில் உண்ணாவிரதம்

அன்னை பூபதியின் நினைவாக நெல்லியடியில் இன்று புதன் அடையாள உண்ணாவிரதம் நடைபெறவுள்ளது. [50]

# காமினி கொண்டுவந்த கோத்தணி நிறுத்தப்படும்

பெருந்தோட்டத்துறை அமைச்சராக, காமினி திஸநாயக்கா இருந்தபோது கொண்டுவரப்பட்ட கொத்தணி மூறை தற்போது நிறுத்தப்படவுள்ளது.

கொத்தணி முறையை நிறுத்துவதாக புதிய பெருந்தோட்டத்துறை அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன அமைச்சர் செல்லச்சாமியிடம் நேற்று உறுதியளித்துள்ளார்,

# நெல்லியடி மக்கள் வங்கி கிளையில் இன்று, நாளை நிவாரணம்

நெல்லியடி மக்கள் வங்கிக் கிளையில் மீளக் குடியமர்தல் நிவாரணம் ஆயிரம் ரூபாய் வீதம் இன்று புதன்கிழமை கப்புதூ கிராமத்தைச் சேர்ந்த 131 குடும்பங்களுக்கு வழங்கப்படவுள்ளது.

இதே வங்கியில் இதே நிவாரணம் நாளை வியாழக்கிழமை கரவெட்டி மத்தியைச் சேர்ந்த 125 குடும்பங்களுக்கும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை கரணவாய் கிழக்கைச் சேர்ந்த 242 குடும்பங்களுக்கும், அல்வாய் கிழக்கைச் சேர்ந்த 302 குடும்பங்களுக்கும் வழங்கப்படவுள்ளன. [50

மாத்தயா...

ஆலோசகர் அன்ரன்பாலசிங்கம் ஆகியவர்களுடன் அம்பாறை இராணுவ பொறுப்பாளர் கஸ்ரோ, திருமலை இராணுவ பொறுப்பாளர் ரூபன் ஆகியோரும கலந்து கொண்டனர்.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ்,[பிறைவேட்]லிமிற்றெட் நிறுவனத்தினரால்யாழ்ப்பாண ஸ்ரான்லி வீதி 62ஐ இலக்கத்திலுள்ள அச்சகப் பிரிவில் 11.04.1990ல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது